
# உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு



# உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு



★

ஆசிரியர்:
ந. சி. கந்தையா

★

பகுத்தறிவுப் பாசறை
பவழக்காரத் தெரு :: சென்னை 1.

 [விலை 0 8 0

# முன்னுரை

கி. பி. ஏழாம் நூற்றூண்டுமுதல் பதினுன்காம் நூற்றூண்டுவரை தமிழ்நாட்டில் பெரிய மாறுதல்கள் உண்டாயின. அக்காலத்து தமிழர்களது சமயமும் மொழியும் பெரிதும் ஆரியச்சார்பு அடைந்தன. இதற்குக் காரணம் தமிழர் கோயில்களை மேற்பார்த்து வந்தவர்களாகிய பார்ப்பார் எனப்பட்ட தமிழ்மக்கள் பிராமண மதத்தைத் தழுவிச் சமக்கிருத மொழியைத் தமது சமயமொழி சாதி மொழியெனக் கொண்டமையாகும். இது இன்று கிறித்துவ சுத்தோலிக்கராக மாறிய தமிழர் இலத்தீன் மொழியைச் சமயமொழியாகக் கொள்வதுபோல்வது. பிற்காலத்தில் தமிழ் மக்கள் சிறிது சிறிதாக விழிப்படைந்தார்கள். பற்பலர் பொல்லாத ஆரியக் கொள்கைகளை எதிர்த்து வந்தனர். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை காலம்முதல் தமிழைப்பற்றியும் தமிழ் மொழியைப்பற்றியும் அறிவு நூல் முறையான ஆராய்ச்சி தலையெடுத்தது. அக்காலம்முதல் பல அறிஞர் தமிழர் வரலாற்றுண்மைகளை விளக்கி அரிய கட்டுரைகளை ஆங்கில மொழிகளில் எழுதித் திங்கள் வெளியீடுகளிலும் பிற வெளியீடுகளிலும் வெளியிட்டனர். அவைகளைத் தக்க முறையில் தமிழிற்றிருப்பிப் பொது மக்கள் படிப்பதற்கு எவருமுதவவில்லை. அவ்வாறு மறைந்து கிடக்கும் அறிஞரின் ஆராய்ச்சி உரைகளை யாம் இயன்றவரையில் தமிழ்ப்படுத்தி எமது நூல்கள்மூலம் வெளியிட்டுள்ளோம். உலக நாகரிகத்தில் தமிழர்பங்கு என்னும் இச் சிறிய நூல் இலங்கையில் சிறந்த கல்வியாளராயுள்ள திரு. க. பாலசிங்கம் அவர்கள் முப்பது ஆண்டுகளின் முன் ஆசிரியர் கலாசாலை மாணவர் முன்னிலையில் செய்த ஓர் சொற்பொழிவின் சுருக்கமாகும். இக் கட்டுரை இக் கால ஆராய்ச்சி முடிவுகளை மிகத் தழுவியிருத்தல் எவருக்கும் மகிழ்ச்சி அளிக்கத்தக்கது.

1—12—48
சென்னை

ந. சி. க.

# உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு


## வரலாற்றின் பழமை

இவ்வுலகின் வரலாறு, கிறிஸ்து பிறப்பதற்கு 4004 ஆண்டுகளின் முன் செல்லவில்லை என மேல்நாட்டவர்கள் அண்மை வரையில் கருதினார்கள். வேறு சாதியினர் இப்பூமியின் தோற்றத்துக்கும் மனிதத் தோற்றத்துக்கும் அதிக பழமையைக் கூறினார்கள். எகிப்தியர் தமது பழமை பதின் மூவாயிரம் ஆண்டுகள் முதல் முப்பத்து மூவாயிரம் ஆண்டுகள் வரையில் எனக் கூறினர். மக்கள் ஒரு இலட்சம் ஆண்டுகளின் முன்னும், தாவர உயிர்களும் பிற உயிர்களும் ஒரு கோடி ஆண்டுகளின் முன்னும் இவ்வுலகில் தோன்றியிருக்கலாம் என இக்கால விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

## இவ்வுலகின் வயது

இவ்வுலகின் பழமை அளவிடற்கரியது. பூமி ஒரு காலத்தில் அனல் வாயுக் கோளமாக இருந்து குளிர்ந்தது என்னும் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு அதன் வயதை அளக்க முயற்சிகள் செய்யப்பட்டன. 1898-ல் இரேடியம் (Radium) என்னும் உலோகம் கண்டு பிடிக்கப்பட்டது. அதன் பின் பூமியின் வயதைப்பற்றிக் கூறப்பட்ட முடிவுகளில் பல ஐயங்கள் எழுந்தன. ஒரு 'கிராம்'

(Gramme) இரேடியம் ஒரு கிராம் தண்ணீரை ஒரு மணி நேரத்தில் கொதிக்கச்செய்ய வல்லது. வரலாற்றுக் காலத்திலேயே பல நாடுகள் மழையில்லாது காய்ந்து உயிர்கள் வாழ்வதற்கு முடியாதனவாய் மாறியுள்ளன. இப்பொழுது பூமி வெப்பமேறி வருகின்றதா குளிர்ந்து வருகின்றதா என்னும் கேள்விகள் கேட்கப்படுகின்றன. பழைய வரலாறுகளைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. பழைய நிலப்பரப்புகள் நீருள் மூழ்கிவிட்டன. அவைகளோடு எவ்வகை நாகரிகங்கள் மறைந்து போயின என்று எவரால் கூறமுடியும்?




பழைய நாகரிகங்கள்

அமெரிக்க ஆராய்ச்சியாளர் மேற்கு ஆசியாவிலுள்ள நிப்பூரில் புதை பொருள் ஆராய்ச்சி நடத்தினர். அந்நகரின் நாகரிகம் கி. மு. 7,000 முதல்

கி. மு. 5,000 அல்லது கி. மு. 6,000 வரையிலுள்ளது. எகிப்திய நாகரிகத்தைக் காட்டும் எழுத்து மூலமான சான்றுகள் காணப்படுகின்றன. எகிப்தில் கிடைத்துள்ள மிகப் பழைய புத்தகம் எகிப்திய பிரமிட்டுச் சமாதி கட்டுவதற்கு (கி. மு. 4000) முற்பட்டது. அக்காலத்தில் தமது நாகரிகத்தின் பொற்காலம் கழிந்து விட்டதென எகிப்தியர் கருதினார்கள். தாம் பெரிய சாதியாராய் விளங்கியிருந்த பழமையை அறிய அவர்கள் தமது பழமையை நோக்கினார்கள். கி. மு. 9000-க்கு முன் பாபிலோனியரும், கி. மு 6000-க்கு முன் எகிப்தியரும் பெரிய கட்டிடங்களை எழுப்பித் தமது பெருமையை நாட்டினார்களென்றால் வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்தை அல்லது பழைய நாகரிகங்களைப் பற்றி நமக்கு என்ன தெரியும்?

## பாபிலோனிய நாகரிகம்

இன்று அறியப்படும் நாகரிகங்களுள் பாபிலோனிய நாகரிகம் பழமையுடையது. பழைய பாபிலோனியர் சுமேரியர் என்றும் அக்கேடியர் என்றும் அறியப்பட்டார்கள். அவர்களைச் சுமேரிய அக்கேடியர் எனக் குறிப்பிடுவோம். அக்கேடியரும் சுமேரியரும் ஒரேமொழியைச் சிறிது வேறுபாட்டுடன் வழங்கினார்கள். இவைகளுள் சுமேரிய முறையான பேச்சே பழமையானது. சுமேரியர் உயர்ந்த கல்வியாளர். பாபிலோனிய சக்கரவர்த்திகள் காலத்தில் சுமேரிய மொழி இறந்து விட்டது; அது இலக்கிய மொழியாகப் பயிலப்பட்டது; அது சமயமொழியாக விருந்தது.

சட்டங்களும் அம்மொழியில் எழுதப்பட்டிருந்தன. கால்வாய்கள் அமைத்தல் போன்ற அமைப்பு வேலைகள் சுமேரியரால் செய்யப்பட்டன. பின்பு செமித்திய மக்கள் அராபியாவினின்றும் வந்து குடியேறினார்கள். கி. மு. 3,800 வரையில் முதலாம் சார்கன் பாபிலோனிய சிற்றரசுகளை ஒன்றுபடுத்தினான். பாபிலோனைத் தலைநகராகக் கொண்ட அரசபரம்பரை கி. மு. 2,450-ல் தொடங்கிற்று. அசீரியா பாபிலோனின் குடியேற்ற நாடாக விருந்தது. அதன் தலைநகராகிய நினேவா கி.மு. 3000-க்கு முன் அமைக்கப்பட்டது. கி.மு 1,450-ல் அசீரியா விடுதலை பெற்றுத் தனிநாடாகப் பிரிந்து பாபிலோனியா, சிரியா, எகிப்து யூதேயா முதலிய நாடுகளடங்கிய பேரரசாகத் திகழ்ந்தது. கி பி. 606-ல் அசீரியப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. அப்பொழுது பாபிலோனியா விடுதலை அடைந்தது. இரண்டாவது பாபிலோனியப் பேரரசு கி. மு. 538-ல் முடிவடைந்தது. அப்பொழுது பாபிலோனியா பாரசீகத்தின் ஒருபகுதியாக அடங்கிற்று. அது மறுபடியும் அலக்சாந்தரால் கி. மு. 324-ல் வெற்றி கொள்ளப்பட்டது.

## பாபிலோனிய மன்னர்

அமுரபி என்னும் பாபிலோனிய அரசன் காலத்தில் (கி. மு 2,342) ஆபிரகாம் சாலதியாவின் தலைநகராகிய ஊரைவிட்டுக் கானான் தேசம் சென்று குடியேறினார். நபுச்சண்ட்நேசர் கி. மு. 586-ல் யூதரை மறியற் படுத்தினான். பாபிலோனிய,

அசிரிய நாகரிகங்கள் இணைந்து அசிரிய பண்பாடாக மாறின. கி. மு 1000 வரையில் வாழ்ந்த சாலமன், புத்தகங்கள் எழுதுவதற்கு முடியவில்லை எனக் கூறியுள்ளான். அவன் கூறியது எபிரேய இலக்கியங்களைக் குறிக்குமாயின் அக்கூற்றுப் பொருளற்றதாகும். அசுர்பானிப்பால் என்னும் அசிரிய அரசனின் நூலகத்தில், ஒழுங்கு படுத்தி இலக்கமிட்டுத் தட்டுக்களில், வரிசையாக அடுக்கி வைத்து அரசாங்க மேற்பார்வையாளனால் கவனிக்கப்பட்ட 10,000 நூல்களைப் பற்றி நாம் அறியும்போது அக்கூற்றின் உண்மை விளங்குகின்றது. இந்நூலகம் இலயாட் (Layard) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

பாபிலோனிய நூல்கள் களிமண் தட்டுகளில் எழுதிவைக்கப்பட்டன; பைபிரஸ் என்னும் நாணல் தாள்களும் பயன்படுத்தப்பட்டன. பல வகைப் பொருள்கள், பழங்கதைகள், பாடல்கள் அடங்கிய பல நூல்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. கில்கமஷ் வரலாறு, படைப்பு வரலாறுகளைக்கூறும் இதிகாசங்கள் கிடைத்தவைகளுள் முக்கியமுடையன. பாபிலோனியர் அக்கரகணிதம் (mathematics) வான ஆராய்ச்சி, சோதிடம் என்பவைகளில் திறமையடைந்திருந்தனர். அவர்கள் சந்திர சூரிய கிரகணங்கள், வால்வெள்ளி, வெள்ளிக்கிரகம் செல்லும்பாதை, சூரிய மறுக்கள் முதலியவைகளைப்பற்றியும் பொருள்களை பெரிதாகக் காட்டும் ஆடிகளை (magnifying lenses) பற்றியும் அறிந்திருந்தார்கள். பாபிலோனிய சட்டங்கள் சுமேரிய

சட்டங்களைப்பார்த்துச்செய்யப்பட்டவை. அமுராபி யின் சட்டங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவை குற்றம், திருமணம், திருமணநீக்கம், வேலை யாட்களின் கூலிமுதலியவை போன்ற பல பிரிவு களைப்பற்றிக் கூறுகின்றன. எல்லம், மத்தியதரை நாடுகள், எகிப்து என்னுமிடங்களுக்கிடையில் அவர்கள் போக்குவரத்து அஞ்சல் (தபால்) ஒழுங்குகள் செய்திருந்தார்கள். மேற்கு ஆசிய நாடுகளில் பாபிலோனிய பண்பாடு பரவியிருந் தமையால் எகிப்திய அரசாங்க கருமகாரரும் (officials) மேற்கு ஆசியமக்களும் பாபிலோனிய மொழியைப் பயன்படுத்தினர்.

## எகிப்து

நிப்பூரில் புதைபொருள் ஆராய்ச்சி நடத்து வதன் முன் எகிப்தே மிகப் பழைய நாடாகக் கருதப்பட்டது. இப்பொழுது அது பாபிலோனி யாவுக்கு அடுத்த பழமையுடைய நாடாகக் கொள் ளப்படுகின்றது. எகிப்தியர் ஆசிய சாதியினரதும் வடஆபிரிக்க சாதியினரதும் கலப்பினுல் தோன்றி னுர்கள். மேன்ஸ் அரசன் எகிப்திய சிற்றரசர் நாடுகளை எல்லாம் ஒன்றுபடுத்தி கி. மு. 4000-ம் முதல் எகிப்திய அரசபரம்பரையைத் தொடங்கி னுர். கி. மு. 332-ல் அலக்சாந்தர் படை எடுக் கின்ற அளவில் எகிப்தில் 31 அரச பரம்பரை யினர் ஆட்சி புரிந்தார்கள். முதல் அரச பரம் பரைக்கு முன் பெடோயின் (Bedouin) அராபியர் எகிப்தின்மீது படை எடுத்தார்கள். கி. மு. 2000-த் திலிருந்து சில நூற்றுண்டுகள் கிசோஸ் (Hysos)

என்னும் செமித்திய சாதியினர் எகிப்தை ஆண்டார்கள். கி. மு. எட்டாவது நூற்றாண்டில் எதியோப்பியர் எகிப்தை வெற்றி கொண்டனர். அசிரியர் எதியோப்பியரை வெருட்டியடித்தனர். கி. மு. 525-ல் பாரசிகர் எகிப்தை வெற்றி கொண்டனர். கி. மு. 332-ல் அலக்சாந்தர் எகிப்தை வெற்றி கொண்டார் அதன் பின் எகிப்து விடுதலை பெறவில்லை. எகிப்து பாபிலோனியா என்னும் இரு நாடுகளின் நாகரிகங்களையும் ஒப்பிட்டுப் பார்த்த பேராசிரியர் சேயி (Professor Sayee) கூறியிருப்பது வருமாறு: செமித்தியரல்லாத மக்களின் நாகரிக எழுச்சியினாலேயே பாபிலோனிய நாகரிகம் தோன்றிற்று. ஆசிய நாட்டினின்று படை எடுத்துச் சென்ற மக்களே உயர்ந்த நாகரிகப் பண்புகளை எகிப்துக்குக் கொண்டு சென்றார்கள்''[1]

---

1 By the Pictorial hieroglyphic inscription found and interpreted on the Walls of the temple of the Queen Haslitop at Derel Bahri, we see that this Punt can be no other than India. For many ages the Egyptians traded with their old homes and the reference here made by them to the names of the princes of Punt and its fauna and flora, especially the nomenclature of various precious woods to be found but in India, leaves us scarcely room for the smallest doubt that the old civilization of Egypt is the direct outcome of that of the older India—The Theosophist-March 1881 P 123 Quoted in "Hindu Superiority" by Har Baaus Sarda B. A. F. R. S. L.

* The anciet Abyssinians as already remarked, were, originally migrators to Africa from the banks of Abuisin a classical name for Indus—Heran's Historical Researches Vol 2—P 310

நாலாவது அரச பரம்பரைக் காலத்திலே (கி. மு. 3233) பெரிய பிரமிட்டுச் சமாதி கட்டப்பட்டது. அது 480 அடி உயர முடையதாய் 13 ஏக்கர் நிலத்தில் நிற்கின்றது. இலங்கையிலே அனுராதபுரத்தில் வாலகம் வாகு கி. மு. 89-ல் கட்டி எழுப்பிய 405 அடி உயரமுள்ள அபயகிரி தாகபா எட்டு ஏக்கர் நிலப்பரப்பில் நிற்கின்றது. இத்தாகபா இலண்டனிலுள்ள சென்போல்ஸ் தேவாலயத்திலும் பார்க்க 50 அடி அதிக உயரமுடையது; பிரமிட்டுச் சமாதியிலும் பார்க்க 75 அடி தாழ்வானது.

எகிப்தியரிடம் நல்ல இலக்கியங்கள் இருந்தன. கி. மு. 3000 வரையில் எழுதப்பட்ட பைபிரஸ் நூல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பிரைசி பைபிரஸ் (Prisse Papyrus) என்னும் நூல்கள் மக்கள் நல்ல வகையில் வாழவேண்டிய விதிகளைக் கூறுகின்றன. சமயம், மருந்து, கணக்கு, வான ஆராய்ச்சி பாடல்கள் அடங்கிய பல நூல்களும் கண்டு பிடிக்கப்பட்டன. படங்களோடு கூடிய "இறந்தவர்களின் நூல்" என்னும் புத்தகங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. குருமாரும் கற்றோரும் தத்துவக் கொள்கையோடுகூடிய சமயத்தைக் கைக்கொண்டார்கள். வடிவம் அறிய வொண்ணாததும், எல்லாவற்றையும் படைப்பதும், தன்னை ஒருவரும் படையாததுமாகிய ஒரு கடவுள் உண்டு என்று அவர்கள் சமயம் கூறுகின்றது. மரணத்தின்பின் உயிர் அழியாதிருப்பதையும், அது பிறவி எடுப்பதையும் அவர்கள் நம்பினார்கள். அவர்

களின் வழிபாட்டில் இலிங்கம் சம்பந்தப்பட்டிருந்தது. எகிப்தியர் பல தெய்வங்களை வழிபட்டார்கள். ஒரு கடவுளே பல வடிவுகளில் வழிபடப்படுவதாகக் கற்றவர்கள் நம்பினார்கள். குருமார் மூன்றுநாளுக்கு ஒருமுறை தலையையும் உடல் முழுமையும் மழித்துக் கொண்டார்கள். நாளில் நான்குமுறை நீராடினார்கள். கடவுளுக்கு உணவு, நீர், ஆடை, தைலம் முதலியவற்றைக் கொடுப்பதும் ஆடுவதும் பாடுவதுமே அவர்களுடைய வழிபாடு. எகிப்தில் விலங்குகளும் வழிபடப்பட்டனவாகலாம்.

இஸ்ரவேலரைக் கொடுமைப்படுத்திய இரண்டாம் இராம்சே நிலகதிக்கும் செங்கடலுக்கும் இடையில் போக்குவரத்து நடத்துவதற்கு சுயஸ் கால்வாயை வெட்டினன்.

## சீனு

இப்பொழுது உள்ளவைகளில் சீன இராச்சியமே மிகப் பழமையுடையது. கி.மு. 2852-ல் வாழ்ந்த வு. கி. (fu-hi) சீனரின் முதல் அரசனுவன். அவனுக்கு முன் மக்களுக்குத் தமது தாய்மாரையன்றித் தந்தைமாரைத் தெரியாதென்றும் அவர்களுக்கு உணவைச் சமைக்கத் தெரியாதென்றும் கூறப்பட்டுள்ளன. அவன் மக்கள்திருமணம்செய்வதாகியஒழுங்கை நாட்டி அவர்களை வேட்டையாட மீன் பிடிக்க பயிர்செய்ய இசைக் கருவிகளைப் பயன் படுத்தப் பழக்கினுன். இதனுல் எழுதும் முறை வெளியிலிருந்து வந்ததெனத் தெரிகிறது.

கடவுள் தன்மையுள்ள பாம்பு, மஞ்சள் ஆற்றி னின்றும் தோன்றி, ஹூகி அரசனுக்கு ஒரு சுருளைக் கொடுத்ததென்றும், அதில் கோடுகள் காணப்பட் டன என்றும், அதன் பின் ஹூகி சின எழுத்து களைச் செய்தானென்றும் கூறப்பட்டுள்ளன.

குஆங்தி (Huang Ti கி. மு. 2697) காலத்தில் மரம் உலோகம் களிமண்ணாலான வீட்டுத்தட்டுமுட் டுக்கள், மரக்கலங்கள், வண்டிகள் செய்யப்பட்டன. நாணயங்களும் பயன்படுத்தப்பட்டன. குஆங்தி என்பவன் எல்லம் முதல் சினம் வரையில் பயணம் செய்த ஒரு கூட்டத்தாரின் தலைவனாகிய நக்குந்தி (Nakunte) எனப்படுபவனேயாவன் என்று கூறப் படுகிறது.

## எல்லம்

இப்பொழுது மற்றைய பழைய சாதியார் களைப் பற்றியும் சுருக்கமாக ஆராய்வோம். எல் லம் பாபிலோனுக்குக் கிழக்கே உள்ளது. இது சுமேரிய அக்கேடிய காலம் முதல் பாபிலோனிய விழுகைக் காலம் வரையில் இருந்தது. இது அடிக் கடி பாபிலோனோடு போரிட்டுக் கொண்டிருந்தது. எல்லம் நாகரிகம் பாபிலோனிய அல்லது அசிரிய நாகரிகத்தைப்போல உயர்வடைந்திருந்தது.

## பினீசியர்

இன்னொரு பழைய சாதியினர் பினீசியர். இவர்களின் செழிப்புடையவும் வாணிக முதன்மை யுடையவும் காலம் கி. மு 13-ம் நூற்றாண்டளவில். அவர்கள் அக்காலத்து அறியப்பட்ட எல்லா நாடு

களிலும் காணப்பட்டார்கள். அவர்களின் பட்டிணங்களாகிய தயர், சிடோன் என்பன அழியாப் புகழ் பெற்றிருந்தன. காதேஜ் என்பது ஆபிரிக்காவிலிருந்த பினீசிய குடியேற்றநாடு. இங்குதான் அனிபால் (Hannibal) என்னும் மிகப் புகழ் பெற்ற வீரன் தோன்றினன். இவன் உலக அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முயன்றுகொண்டிருந்தான். உரோமர் கடும்போர் செய்து இவனைத் தோற்கடித்தார்கள்.

## எபிரேயர்

எபிரேய நாகரிகம் கி. மு. 1,200 முதல் தொடங்குகிறது. இது இஸ்ரவேலர் எகிப்திலிருந்து பயணப்பட்டதற்குச் சிறிது பிந்தியகாலம். கி. மு. 8-ம் நூற்றூண்டில் பலஸ்தினம் அசிரிய மாகாணமாக மாறிற்று. அசீரியாவின் விழுகைக்குப்பின் அது பாபிலோன் அரசனுகிய நெபுச்சட்நேசருக்கு (கி. மு. 586) உட்பட்டிருந்தது.

## கிரேக்கர்

கிரேக்க நாகரிகம் தோன்றுவதற்கு ஏதுவாயிருந்த மைசீனிய (myceanean) நாகரிகம் கி. மு. 13-ம் நூற்றூண்டளவில் தொடங்குகின்றது. கிரேக்க நாடுகளாயிருந்த சின்ன ஆசியாவும் ஐசியன் கடலும் பாரசிகரால் கி. மு. 6-ம் நூற்றூண்டில் வெற்றி கொள்ளப்பட்டன. அடுத்த ஆண்டில் கிரேக்கர் பாரசிக ஆட்சியைக் கவிழ்த்துவிட்டனர். பாரசிகம், சிரியா, பாபிலோனியா எகிப்து இங்

நியா முதலிய நாடுகளை அலக்சாந்தர் (கி. மு. 334—322) வெற்றி கொண்டார். கிரீசு 146-ல் உரோமரின் நாடாக மாறிற்று.

## கிரீத்தியர் (Cretans)

சின்ன ஆசியாவினின்றும் வந்த கிரீத்திய நாகரிகம் எகிப்திய பன்னிரண்டாவது அரசபரம்பரைக் காலத்தில் உயர்நிலை அடைந்திருந்தது. கிரேக்க மக்கள் கட்டிடம் அமைத்தல், களிமண், வெண்கலம்முதலியவைகளில் உருவங்கள் அமைத்தல், ஓவியம் வரைதல் என்பவைகளில் திறமை அடைந்திருந்தனர். திராய் (Troy) நகரின் வீழ்ச்சி கி.மு. 1,783 வரையில். ஓமர் தமது காவியங்களை கி. மு 850 வரையில் செய்தார்.

## பாரசீகர்

கி. மு. ஆறும் நூற்றாண்டில் பாரசிகப் பேரரசு தொடங்கிற்று. சைரஸ் என்னும் பாரசிகப் பேரரசன் மிதியா, அசிரியா, பாபிலோனியா முதலிய நாடுகளையும் சின்ன ஆசியாவிலும் அயலிலுமுள்ள கிரேக்கபட்டினங்களையும் வெற்றி கொண்டான். (கி. மு 538) இது காரணமாக எகிப்து, மசிடோனியா, திராய் முதலிய நாடுகள் பாரசிக ஆட்சிக்கு உள்ளாயின. இவ்வாட்சி அலக்சாந்தரின் வெற்றியோடு (கி.மு. 331 ) முடிவடைந்தது. அற்ப ஆயுளுள்ள இவ் விராச்சியத்தைப்பற்றி, அது கிரேக்கரோடு நடத்தியபோர்

களைக்கொண்டு அறியவருகின்றது. பாரசிகரின் நாகரிகம் பெரிதும் எல்லம் பாபிலோனியச் சார்புடையது.

## உரோமர்

கி. மு. ஐந்தாம் நூற்றுண்டில் உரோம் முதன்மை எய்திற்று. காதேஜ்நகரின அழிவுக்குப் பின்பே உலகத்தை ஆளுதற்கு உரோமர் திமிறிக்கொண்டிருந்தார்கள்.

## இலங்கையும் இந்தியாவும்

இந்தியாவும் இலங்கையும் வரலாற்றுக் காலத்திற்கு முன்தொட்டு ஒன்றோடு ஒன்று தொடர்பு பெற்றிருந்தன. கிறிஸ்துவ ஆண்டு தொடங்குவதன்முன் இலங்கையின் முக்கிய நிகழ்ச்சி விசயன் 543-ம் அங்கு வந்து இறங்கியது. விசயன் வந்து இறங்கிய இடம் இலங்கையின் வடகரைஎன முதலியார் இராசநாயகமவர்கள் பற்பல ஏதுக்கள் காட்டித் தனது பூர்வீக யாழ்ப்பாணம் என்னும் நூலில் எழுதியுள்ளார். விசயன், மதுரையை ஆண்ட பாண்டிய அரசன் புதல்வியை மணந்தான். பாண்டிய குமாரியுடன் 700 உயர் குடும்பப் பெண்களும் 18 அரசாங்க கருமகாரரும், அடிமைகளும் 75 பணியாளரும் வந்தார்கள்.

## இயக்கரும் நாகரும்

விசயன் இலங்கைக்கு வந்தபோது இலங்கையில் இயக்கர் நாகர் என்னும் இரு குலத்தினர் வாழ்ந்தார்கள். நாகர் வடக்கிலும் மேற்கிலும்

வாழ்ந்தார்கள். அவர்களுக்கு தனி அரசன் இருந்தான். இயக்கர் இலங்கையின் தென்பகுதியில் வாழ்ந்தார்கள். விசயன் முதலில் இயக்க இராச குமாரியை மணந்திருந்தான். இயக்கர் என்பது இராக்கதர் என்பதன் மாறுபட்ட உச்சரிப்பு ஆகலாம். இராமாயணம் இராக்கதருக்கும் இராமருக்கும் இடையில் நிகழ்ந்த போரைப் பற்றிக் கூறுகின்றது. இராசவளி என்னும் நூல் இப்போர் கி.மு. 2370-ல் நிகழ்ந்ததெனக் கூறுகின்றது. இந்துக்களின் புராணங்கள் கந்தக் கடவுளுக்கும் இலங்கை வேந்தனை சூரனுக்குமிடையில் நேர்ந்த போரைப்பற்றிக் கூறுகின்றன.

## ஆரியர்

இப்பொழுது ஆரியரின் வரலாற்றைப்பற்றி ஒரு சிறிது ஆராய்வோம். இச்சாதியாரின் ஆதி உறைவிடம் மத்திய ஆசியா, லிதுவேனியா ஸ்காந்திநேவியா, காக்கேசியா அல்லது ஊரல் மலைப் பக்கங்கள் ஆகலாம். இவர்களில் ஒரு கூட்டத்தினர் சிந்துவுக்கும் பாரசிகக்குடாவுக்குமிடையில் சென்று தங்கினர். வேத ஆரியரும் ஈரானியரும் (பாரசிகர்) இரண்டாகப் பிரிந்த சாதியினர். இப்பொழுது அவர்களின் தொடர்பு வெளிப்படையாகத் தோன்ருதபடி மறைந்துவிட்டது. பாரசிகரின் பழைய சென்ட் மொழிக்கும் இருக்கு வேத பாடல்கள் செய்யப்பட்ட மொழிக்கும் ஒற்றுமையுண்டு. இந்து ஐரோப்பிய மக்களுள் இவ் விரு பிரிவினருமே தம்மை ஆரியர் என

வழங்கினர். இப் பெயர் மாக்ஸ்மூலராலும் மற்றைய கீழ்நாட்டு வரலாறுகளை ஆராய்வோராலும் ஏனைய கூட்டத்தினருக்கும் இட்டு வழங்கப்பட்டது. இப்பொழுது இப் பெயர் இந்தியரையும் பாரசிகரையுமே குறிக்கின்றது இச் சாதியாரின் ஒரு கூட்டத்தினர் பஞ்சாப்பை வடமேற்குக் கணவாய்கள் வழியாக வந்தடைந்தனர். இவர்கள் இந்தியாவை வந்தடைந்தது கி. மு. 2000க்கும் கி. மு. 1400க்கு மிடையிலெனை ஆர். சி. தத்தர் இந்தியாவின் பழைய நாகரிகம் என்னும் நூலிற் குறிப்பிட்டுள்ளார். ஆரிய மக்கள் இந்தியாவை அடைந்த போது இந்தியா முழுமையும் பரவி வாழ்ந்தோர் திராவிட மக்களே யாவர்.[1]

## ஆரியர் குடியேறிய இடங்கள்

பாரதப் போர் கி. மு. 1250-வரையில் நிகழ்ந்த தெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இக்காலக் கணக்குகள் ஏற்றனவாயிருக்கலாம். இக்காலத்

---

1 When the hunqry swarms of Aryan tribesmen descended upon North-west Indis, the whole land with the exception of the North East corner was occupied by a long settled Dravidian population, split into many Castes and tribes—

The mythic society journal vol IV P 157—James Hornwell.

It will appear that the civilization of the Indus valley was associated with the speakers of the Dravidian languages. Lastly the Brahmi script of later Vedic civilization is itself tracad to Indus valley pictographs It will thus appear that the Dravidian speakers were the latest occupants of India before the Indo- Aryane arrived

—Hindu India-P. 38-Radha Kumud Mukerji

தின்முன் வேறு எந்த ஆரிய சாதியினரும் உலகின் வேறெப் பகுதிலும் உயர்ந்த நாகரிகம் அடைந்திருக்கவில்லை. மித்தானி (Mittani) ஆரியரைப் பற்றி முதன் முதல் பாபிலோனிய இலக்கியங்களில் அறிகின்றோம். கி. மு. 15-ம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட பாபிலோனிய பட்டையங்களில் இவர்களைப் பற்றிக் காணப்படுகின்றது. இந்துக்குஷ் கணவாய்களைக் கடந்து ஆரியர் வந்தபோது அவர்கள் திராவிடரோடு மோதினர். திராவிடர் ஆரியருக்கு மிக்க பயம் விளைத்தார்கள். அக் காரணத்தினால் அவர்களைப் பேய்கள், தீமை விளைக்கக் கூடிய மந்திரங்களறிந்தவர்கள், ஆகாயத்தில் பறக்கவும், வேண்டிய வடிவங்களை எடுக்கவும் வல்லவர்கள் என்றும் ஆரியர் நினைத்தனர். ஆகவே அவர்கள் தாம் எதிர்க்க நேரிட்ட மக்களைக் குறிக்க இராக்கதர் அசுரர் என்னும் பெயர்களை வழங்கினர். இப்பெயர்களுக்கு அவர்கள் மொழியில் பேய் என்ற பெயருண்டு.

### ஆரியரின் பழைய புத்தகங்கள்

வரலாற்றுப் போக்கில் இருக்குவேதம் தாவிதின் துதிகள் போன்றவை. திராவிடரை அழிக்கும்படி இந்திரன் கேட்கப்படுகிறான். திராவிடர் ஆட்டு மூக்கும் கறுப்புத் தோலுமுள்ள பைசாசுகள் (தாசர்) என்று கூறப்பட்டுள்ளார்கள். ஆரியர் பெரிய கூட்டமாக இந்தியாவுள் நுழையவில்லை. கி. மு. 1400 க்கு முன் ஆரியர் சட்லெஜ் (Subtlej) ஆற்றைக் கடக்கவில்லை. கி. மு. 1000 வரையில் இவர்களில் சில பிரிவினர் சட்லெஜ்

ஆற்றைக் கடந்து கங்கைச் சமவெளி வரையிற் சென்று வாழ்ந்தார்கள்.

இந்தியரின் மூன்றில் இரண்டு பங்கினர் சமக்கிருதத் தொடர்பான மொழிகளைப் பேசுவதால் அம்மூன்றிலிரண்டு பங்கினரும் ஆரியர் எனக் கருதப்படுகின்றனர். உண்மை அவ்வாறன்று. ஒரு மொழியைப் பேசுவோர் அம்மொழியைத் தோற்றுவித்தவர்களாக மாட்டார்கள். இதற்கு எடுத்துக் காட்டு உரோமரின் வழித் தோன்றல்களல்லரான பல சாதியினர் உரோமன் மொழியைப் பேசுவதாகும். ஆரியரல்லாத பல மக்கள் சமக்கிருதத்தை வழங்குவதைப்பற்றி மனு நூல் குறிப்பிடுகின்றது. விந்தியமலைக்கு வடக்கேயுள்ள ஆரியா வர்த்தம் மாத்திரம் வாழ்வதற்கு ஏற்றதென்றும், பழமையைப் பின்பற்றுகின்ற பிராமணர் பஞ்சாப்புக்கும் இராசபுத்தானுவுக்கும் இடையிலுள்ள பிரம வர்த்தத்தில் வாழவேண்டுமென்றும் அது கூறுகின்றது.

## இந்திய குலத் தொடர்புகள்

இந்திய மக்கள் இன ஆராய்ச்சித் தலைவராயிருந்த சர் அர்பேட் ரைஸ்லி (Sir Herbert Risly) என்பார் கலப்பற்ற ஆரியர் பஞ்சாப், இராசபுத்தானு, காசுமிரம் முதலிய இடங்களில் வாழ்கின்ருர்கள் என்றும் ஆனல் அவர்களிடை சிறிது அவுண சித்திய (Huns Scythian) இரத்தக் கலப்புக் காணப்படுகின்றதென்றும் கூறியுள்ளார். சுத்தமான திராவிட சாதியினர் கன்னியாகுமரிமுதல் கங்கைக்கரை வரையும், மேற்கே ஆக்ராவரையும்

காணப்படுகின்றனர். இப் பகுதி சென்னைமா வட்டம், ஹைதராபாத்து, மைசூர், மத்திய மாகாணங்கள், மத்திய இந்திய பகுதிகள், சூடியநாகபுரி, வங்காளத்தின் பெரும்பகுதி என்பவைகளை அடக்கிநிற்கும். கீழ்வங்காளத்திலும் ஒரிசாவிலும் மங்கோலியரும் திராவிடரும் கலந்த கலப்புச் சாதியினர் வாழ்கின்றனர். ஆக்கிரா அவுத் (oudth) பீகார் அடங்கிய ஐக்கிய மாகாணங்களில் திராவிட ஆரியக் கலப்பினால் தோன்றிய மக்கள் வாழ்கின்றனர். இந்தியா முழுமையிலும் பிராமணர் காணப்படுகின்றனர். ஆனால் அவர்களின் எண் மிகக்குறைவு. இப்பிரிப்பு ஏற்றதாயிருக்கலாம் அல்லது ஏலாததாயிருக்கலாம்; ஆனால் இந்திய மக்களில் ஐந்தில் நான்கு பகுதியினர் ஆரிய இரத்தக் கலப்பற்றவர்களேயாவர்.

1872-ல் அரசினர் எடுத்த மக்கள் எண்ணிக்கையின்படி இந்தியாவில் ஒருகோடி அறுபது இலட்சம் ஆரியரும் ஒரு கோடி பத்திலட்சம் ஆரியத் திராவிடக் கலப்புமக்களும் வாழ்ந்தார்கள். மீதி இந்தியர் ஆரியக் கலப்பில்லாதவர்களாவர். இந்தியாவிலுள்ள சாதித் தொடர்புகளைப்பற்றி அறியாவிடின் புரான இதிகாசங்களில் சொல்லப்படும் இந்திய வரலாறு மயக்கத்துக்கு இடமாகும்

### போர்க்குணமுள்ள திராவிடக் கூட்டத்தினர்

ஆரியரைப் போர்க்குணமுள்ள பலகூட்டத்தினர் சூழ்ந்திருந்தார்கள். ஆரியர் தமது அதிகாரத்தை வலிமையால் நாட்ட முடியாதெனக் கண்டார்கள். ஆகவே அவர்கள் கிளைவும் (Clive) வாரன்ஹேஸ்டிங்கும் கையாண்ட முறையையே கையாண்டனர். அவர்கள் உள்நாட்டு அரசரோடு அரசாங்க ஒப்பந்தங்கள் செய்தார்கள். ஆரியப் பாடகர்களும் குருமாரும் நாகர், அரசர், இராக்க

தார்களுடைய நாடுகளுக்குச் சென்றார்கள். செல்லும்போது தம்மோடு அக்கினி சோம வழிபாடுகள், ஆரியப்பேச்சு, ஆரியப் பழக்க வழக்கங்களையும் கொண்டு சென்றார்கள். இருக்கு வேதத்தில் இதற்குப் போதிய சான்றுகளுண்டு. வேத காலத்திய இரண்டு பெரிய இருடிகள் வசிட்டரும் விசுவாமித்திரரும். திரிற்சு எனப்பட்ட தூய ஆரியருக்கு வசிட்டர் குருவானார். பூருவர், பாதர் எனப் பட்டவரும் அதிகாரம் படைத்தோரும், ஆரியரின் பகைவருமாகிய இரு திராவிடக் கூட்டத்தினருக்கு விசுவாமித்திரர் குருவானார்[1]. இவ் விரு இருடிகளும் பிற்காலப் பிராமணக் கொள்கைகளுக்கு எடுத்துக்காட்டாவர்.

---

1 சாதிக்கலப்பும் உண்டாயிற்று.

There was also inevitably at work a process of fusion between the Aryans andthe non-Aryans by inter marriage or by alliance — Hindu Civilization— R.K. Mookerji.

The distinction between the Aryan and non-Aryan then grew less sharp while social and political conditions became more complicated. The children of Dasu concubines in the 'Aryan households and those of Aryan women captured by Dravidian chieftains adopted Aryan customs and religious rites. The fair women of Aryan descent were an irresistible attraction for Dravidian chieftains and racial pride did not prevent Indo-Aryan families from giving a daughter in marrige to a dark skinned neighbour for a sufficient consideration—But as Dravidian society was matriarchal such inter marriages, with or without consent always exerted powerful influence in the Aryanization of India, for in the course of time all the highest Dravidian families both in the north and south claimed Aryan descent on their mothers' side and adopted Aryan customs and religion—a Short History of India p. p. 1926, E.B. Havell.

வசிட்டரைப் பின்பற்றினோர் ஆரியக் கொள்கைகளெல்லாதவற்றைச் சிறிதும் ஏற்றுக்கொள்ளவில்லை. விசுவாமித்திரன் வமிசத்தவர் அவ்வாறிருக்கவில்லை அவர்களின் முயற்சியினால் திராவிடர் ஆரிய மயமாக்கப்பட் டிருக்கலாம். இவர்களின் கொள்கையினால் திராவிடக் கொள்கைகளும் வழக்கங்களும் ஆரிய வணக்கத்துள் நுழைந்தன. நம் காலத்திலும் விசுவாமித்திரரின் கொள்கையை "பாதர் பெஸ்கி" இடத்திற் காண்கின்றோம். இந்தியத் தெய்வமாக அவர் கிறித்துவை நுழைக்க முயன்றார். தனதுபெயரையும் வீரமாமுனிவரென மாற்றினார்; இந்துமதத் துறவி போல உடையணிந்தார். சைவக்கோயில்களில் நடைபெறும் கிரியைமுறையால் கிறித்துவை வழிபட்டார். தமிழில் பல துதிகளையும் புராணங்களையும் செய்தார். போப்பு இவருக்கு உற்சாகம் அளிக்காமையால் இவரது முயற்சி பலனளிக்கவில்லை. புராண இதிகாசங்களை இம்முறையில் பயில்வதால் பல உண்மைகள் விளங்கும்.

## பாரத இராமாயணங்கள்

பாரதம் இன்றைய நிலையை அடையுமுன் பல மாறுதல்கள் அடைந்திருத்தல் வேண்டும். இது தொடக்கத்தில் 8000 சுலோகங்கள் உடையதாயிருந்த தென்றும் பின் சேர்க்கப்பட்ட சுலோகங்களோடு 24,000 சுலோகங்களாயின என்றும் அந்நூலே கூறுகின்றது. இப்பொழுது 100,000 சுலோகங்களுக்குமேல் காணப்படுகின்றன. பிற்காலப் பிராமணர் பல இடைச்செருகல்

களைப் புகுத்தினார்கள். ஆகவே மாபாரதத்தைக் கொண்டு உண்மை வரலாற்றை அறிய முடியாது. இப்பொழுது நினைக்கப்படுவதுபோல இராமாயணம் ஆரியர் தென்னிந்தியாவையும் இலங்கையையும் வெற்றிகொண்ட வரலாறன்று. இராமர் ஒருபோதும் தனதுபடையோடு இலங்கைக்கு வரவில்லை. இராவணனது தம்பி விபூடணனுடையவும், மைசூருக்கு அண்மையில் ஆட்சிபுரிந்த சுக்கிரீபனுடையவும் உதவியைப்பெற்று அவர் இராவணனை வென்று உடனே சீதையை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டார்.

இராமாயணத்தின்படி இராமர் கறுப்பு நிறத்தினர் ஆகவே அவர் திராவிடராகலாம். தமிழில் இரா என்பது இருளைக் குறிக்கும். சமக்கிருதத்தில் இராமா என்பது கலப்பையைக் குறிக்கும். சீதை என்பது உழவுசாலையைக் குறிக்கும்.

## ஆரியப்பாடகர்

திராவிட அரசரின் அரண்மனைகளில் இருந்த ஆரியப்பாடகர் பிற்கால ஆரிய வீரர்களையும் பாடினர். திராவிடரின் உள்நாட்டு இலக்கியம், வரலாறு, பழங்கதைகள் படிப்படியாகச் சமக்கிருத இலக்கியங்களிற் புகுந்தன. இதனாலேயே திராவிடராகிய பாண்டவர் மாபாரதத்தில் ஆரியராகத் தோன்றுகின்றனர். பாண்டவரின் மூத்தவனாகிய உதிட்டிரன் இயமனின் புதல்வன். இயமன் பழைய தமிழ் அரச பரம்பரையை நிறுத்தியவனாவன். அருச்சுனன் இந்திரனின் புதல்வன். இந்திரனுடைய

இராச்சியம் கோதாவரிக்கும் கிருட்டிணவுக்கும் இடையிலுள்ளது. பகன் என்னும்பெரிய அசுரனை வெற்றிகொண்ட வீமன் வாயுபுத்திரன். அனுமானும் அம்மரபைச் சேர்ந்தவன். வாயு பரம்பரையினர் மைசூரை ஆண்டவர். நகுலசகாதேவர் மலையாளத்தை ஆண்டவர். இவ்வைவரும் உடன்பிறந்தாரல்லர்; நண்பர் சமக்கிருத மகா பாரதத்திலும் ஐந்து அரசரும் அவரவர் பரம்பரைப் பெயர்களாலறியப்படுவர். மாபாரதப் போரில் பாண்டவரின் படைக்குப் பெருஞ்சோறு அளித்த உதியனைப்பற்றிய பழம் பாடலொன்று புறநானூற்றிற் காணப்படுகின்றது.

இராமர் வாழ்ந்தகாலம் எனக் கருதப்படுகின்ற அப்பொழுது தென்னிந்தியா இலங்கை என்னும் நாடுகளை ஆரியர் வெற்றிகொண்டார்கள் எனக் கொள்ள ஆராய்ச்சியாளரால் முடியவில்லை. நந்தருக்கு இவ்விடர்ப்பாடு தோன்றிற்று. அவர், மாபாரதத்திற்போலவே இராமாயணத்திற் கூறப்படும் பெயர்கள் கற்பனைகள் எனச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார். இருக்கு வேத காலம் முதல் சீதை உழவுசாலாகக் கொள்ளப்பட்டுத் தாய்த்தெய்வமாக வணங்கப்பட்டாள். பயிர்ச் செய்கை தெற்கு நோக்கிப் பரவிய போது சீதை தெற்கே கவர்ந்து செல்லப்பட்டாள் என்னும் பழங்கதையைத் தோற்றுவிப்பது கடினமன்று. சீதையும் இராமரும் திராவிடர் எனவும் அவர் நிகழ்ச்சிகள் ஆரியர் வருகைக்கு முற்பட்ட செயல்களெனவும் கொள்ளின் இராமாயணம் மாபாரதங்

களைப் பற்றிய மயக்கங்கள் அகன்று விடும். ஆரியக்கவி ஒருவர் திராவிடக் கதை ஒன்றை எடுத்து இராமாயணக் கதையாகச் செய்திருக்கலாம்.

கந்தபுராணம் இலங்கையை ஆண்ட அசுர வேந்தனை வெற்றிகொண்ட வீரனின் வரலாறு.

## தமிழ் நாடு

மங்கோலியர் வடகிழக்கு வழியாக இந்தியாவை அடைந்து அசாம், கூச் பிகார், நெபாளம், முதலிய இடங்களிற் குடியேறி கீழ் வங்காள மக்களோடு கலந்தார்கள். தெற்கிலிருந்து தொடங்கினல் திராவிடரின் வரலாற்றை அறிவது எளிது. தெற்கே இருந்த நாடுகள் சேர சோழ பாண்டியர் ஆட்சிக்குட்பட்ட நாடுகளாகும்.இவைகளைப்பற்றிப் பழைய இதிகாசமாகிய இராமாயணம் கூறுகின்றது. பாண்டியர் தலைநகரமாகிய கபாடபுரத்தின் வாயிற் கதவுகள் பொன்னலும் இரத்தினக் கற்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன என்று இராமாயணம் கூறுகின்றது. பாண்டியநாடு பழைய சங்கங்களுக்கு இருப்பிடமென்று பழைய நூல்கள் கூறுகின்றன. தலைச்சங்கப் புலவர்களின் சில நூற் பெயர்கள் மாத்திரம் நமக்குக் கிடைத்துள்ளன. அச் சங்கம் கடல்கொண்ட மதுரையில் இருந்தது.இரண்டாவது சங்கம் கவாடபுரத்திலிருந்தது. இவ்விடமும் கடலுள் மறைந்தது. இரண்டாஞ் சங்கத்து நூற்பெயர்கள் சிலமாத்திரம் நமக்குக் கிடைத்துள்ளன. முதற்சங்கம் நாற்பத்தொன்பது புலவர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது. இக் கால ஆராய்ச்சி இந்தியாவின் பெரும்பகுதி

கடலுள்மறைந்து போனதை வலியுறுத்துகின்றது. இந்தியாவின் நில அமைப்பைப்பற்றி எழுதிய ஒல்லந்து (Holland) என்பார் கூறியிருப்பது வருமாறு: "பம்பாய்த் தீவுக்குக் கீழே சேற்றுள் பன்னிரண்டடி ஆழத்தில் மரங்கள் படிந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது. திருநெல்வேலிக் கரைப் பக்கத்திலும் நீருள் மூழ்கிப்போன காடு காணப்படுகின்றது." பழைய இலக்கியங்கள் கூறுகின்றபடி திருநெல்வேலிக்குத் தெற்கேயே பூமி கடலுள் மறைந்தது; மறைந்து போன தரையைப்பற்றிப் பழைய நூல்கள் கூறுகின்றன. அத் தரை கன்னியாகுமரிக்கும் பஃறுளிக்கு மிடையே கிடந்தது. 19-ம் நூற்றாண்டிலும் இந்தியாவின் தரைப்பரப்பில் பல மாறுதல்கள் உண்டாயின. ஒல்லந்து (Holland) கூறியிருப்பது வருமாறு:- அண்மையில் இந்தியாவின் தரை நீர்மட்டங்களில் பலமாறுதல்கள் உண்டாயின. குச் (cutch) சில் 1819-ல் நேர்ந்த பூமி அதிர்ச்சியினால் ரானின் (Rann) ஒரு பகுதி நீருள் மறைந்தது. 1897-ல் உண்டான பூமி அதிர்ச்சிக்குப் பின் அளந்து பார்க்கும்போது அசாம் மலைகளின் உயரத்திலும் சரிவாக நோக்கும் தூரத்திலும் பல மாறுதல் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இவ் வுலகில் மக்கள் தோன்றி 4004 ஆண்டுகளாகின்றன என்னும் கொள்கை அடிபட்டுப் போகின்றது. ஆகவே பழைய பாடல்களையும், அரசரையும் புலவரையும் பற்றிய பழைய வரலாறுகளை நாம் பயனற்றன வென்று கொள்ளுவதற்குக் காரணமில்லை. இமய மலையும் கங்கைச் சமவெளிகளும் பிற்காலத்தில்

கடலாழத்தினின்றும் கிளம்பியவை. இமயமலையில் 20,000 அடி வரையில் கடல் சம்பந்தப்பட்ட பொருள்கள் காணப்படுகின்றன. இந்தியநாட்டின் வேறெங்காவது இவ்வகைச் சின்னங்கள் காணப்படவில்லை. அமைப்பில் மிகப் பழமையுடைய தென்னிந்தியாவே மக்களின் ஆதியிடமாயிருத்தல் இயலாத தன்று.

கக்ச்லியும் வேறு சில மக்களின் ஆராய்ச்சியாளரும், ஆஸ்திரேலிய மக்களும் திராவிடரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறினர்கள். மண்டை ஓட்டின் அளவு, மயிரின் தன்மை, முதலிய உடற்கூற்று ஆராய்ச்சிகளால் ஆஸ்திரேலியரும் திராவிடரும் ஒரே இனத்தவர் ஆகமாட்டார் என வில்லியம் டேயிலர் நவின்றுள்ளார். திராவிடர் இமயமலைக்கு அப்பாலிருந்து வந்தவர் என்னும் கொள்கை சிறிதும் பொருத்தமற்றதெனவும் அவ் வாசிரியரே குறிப்பிட்டுள்ளார்.

## சமயம்

இந்தியாவில் பழமை தொட்டு வாழ்ந்த மக்களின் நாகரிகம், தொழில், சமயமென்பவைகளை ஆராய்வோம். திராவிடர் சிவனை வணங்கினர். வில்லி (Lille) என்னும் மேல் நாட்டாசிரியர் தமது நூல் ஒன்றில் குறிப்பிட்டிருப்பது வருமாறு: "ஆரிய வணக்கத்துக்கு எதிராக இருந்தது சிவ வணக்கம் என்பதில் ஐயம் இல்லை. இலிங்கக் கடவுளை வழிபடுவோர் எங்கள் கிரியைகளை அணுகாதிருக்கட்டும் என இருக்குவேதம் கூறுகின்றது. இருக்கு வேதம் பாம்பு வணக்கத்தையும்

கண்டிக்கின்றது. இருக்கு வேதத்தில் பாம்பு அகி எனப்பட்டது. சிவனுக்கு இன்னொரு பெயர் பால் (Bal); அது பாலேசுவர என வழங்கும். சிவன் பினீசியரின் பால் என்றும், எகிப்தியரின் பால், சித் அல்லது தைபன் (Typhon) என்றும் கலோனல் தொட் (Colonel Tod) நம்பினார். பாட்டர்சன் (Paterson) எழுதியிருப்பது வருமாறு: " இவ்வுலகில் பெரும்பாலான மக்களிடையே சைவ சமயக் கொள்கைகள் பரவியிருந்தனவென்று தெரிகிறது. அவை மிகப் பழங்கால மக்களிடையே பரவியிருந்தன. அவர்கள் தாம் கைக் கொண்ட கிரியைகளின் பொருளை அறியாதிருந்தனர். இதுபற்றியே பழைய கிரேக்கர் உரோமர்களிடையே கடவுட் சிலைகள், பழங்கதைகள் கலப்புக்களும் மாறுபாடுகளும் உண்டாயின. " அயல்நாட்டு மக்கள் வெளித் தோற்றத்திலுள்ள கிரியைகளையும் குறிகளையுமே பின்பற்ற முடியும். அவர்கள் கோவிலின் வாயிற்படியைக் கடந்து செல்ல விடப்படமாட்டார்கள் சிவன் சூபிதர், ஒசிரிஸ்[1], மூன்று கண்களுடைய சியஸ் (Zeus) ஆக மாறுபட்டார் சிவனின் பாரியாகிய பவானி[2] யூனோ, வீனஸ், செபிலி ரோகியா, இரிஸ்,

1. Zeus had two eyes placed naturally and the third upon the forehead. They say that Priam had this bust of Zeus from his ancestor Laomedon—The third eye of this ancient statue was in the forehead; and it seems that the Hindus have a symbolical figure of the same kind-The symbolical language of ancient art and mythology—P. 73 R. P. Knight

2. Juno, Venus, Cybele, Rhoea the Syrian goddess, the armed Phallus, Iris, Ceres and Anna Perenna.

செரிங், அன்ன பொன்ன முதலிய தெய்வங்களாக மாறுதலடைந்தார். 'தெய்வங்கள் பலவானமைக்குக் காரணம் அயல்நாட்டு மக்கள் தாம் கையாண்ட பழங்கதைகளின் தொடக்கத்தையும் திருவடிவங்களின் கருத்துக்களையும் அறிந்திராததினாலேயாகும். அவர்கள் தமது நாட்டுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்றவாறு பழங்கதைகளைச் செய்தார்கள். ஆகவே அவர்கள் பழங்கதைகளில் ஒன்றோடு ஒன்று மாறுபடும் மயக்கங்கள் எழுந்தன."

திராவிட இந்தியாவினின்றும் சென்ற சிவ வழிபாடு பால், பெல் வழிபாடுகளாகப் பரவிற்று என்றும் லில்லி கருதினார். இவ் வழிபாட்டுக்கு எதிராக மொசேயும் யூத தீர்க்கதரிசிகளும் போராடினர்கள். இறுதியில் இவ்வழிபாடு ஐரோப்பாவினின்று வுல் ஞானியரால் வெருட்டப்பட்டது. தியுதேனியரைப் (Teutons) போல இயற்கைகளை வழிபட்ட இந்திய ஆரியர் திராவிடரின் சமயக் கொள்கைளைத் தடை செய்ய முடியவில்லை. திராவிடர் சமயக் கொள்கைகள் விசுவாமித்திரர் போன்ற இருடிகள் வழியாக அவர்கள் நூல்களில் புகுந்தன. இவ்வாறு புராணகால இந்து மதம் தொடங்கிற்று.

ஆரியர் இந்தியாவை அடைவதன் முன் இந்திய யோகியர் மனிதனுக்கும் அவனைச் சூழ்ந்துள்ள உலகத்துக்குமுள்ள தொடர்பைப் பற்றியும் ஆராய்ந்தனர் என லில்லி என்பார் கூறி அதற்குப் பாரசிக இலக்கியத்தினின்று ஆதாரமுங் காட்டி

யுள்ளார். [1]இக்கருத்துப் பற்றியே மனதை ஒரு வழிப்படுத்துவதால் உயர்நிலை அடைந்த யோகியின் வடிவாகச் சிவன் வடிவம் கொள்ளப்பட்டது. ஆகவே அவர் பெரிய யோகி எனப்பட்டார். நீறு பூசிய உடலும், பின்னிய சடையும், உடையராய் மரத்தின் கீழிருந்து மனதை ஒரு வழிப் படுத்தி யிருப்பவராக அவர் கொள்ளப்படுவர். பிற்காலத்திலும் திராவிடச் சூழல்களிலேயே தத்துவ ஆராய்ச்சி வளர்ச்சி யடைந்தது

இந்திய தத்துவ ஆராய்ச்சிகளுள் வளர்ச்சி யடைந்த சித்தாந்தக் கொள்கை தெற்கிலேயே வளர்ச்சியடைந்தது. வேதாந்தக் கொள்கையை விரித்து விளக்கியவர் மலையாளியாகிய சங்கராச்சாரியரே. அதன் தர்க்க முறையான விரிவுரை காஞ்சிபுரத்திலிருந்த மத்வரால் வெளியிடப்பட்டது. துவைதக் கொள்கையை விரித்து விளக்கியவராகிய மத்வர் தென் கன்னடத்தில் விளங்கியவர்.

கிருட்டினனும் திராவிடக் கடவுளாவர். பகவத் கீதை அவரால் செய்யப்பட்ட தெனப்படுகின்றது. இந்துமத வழிபாட்டினுள் புகுந்துள்ள

---

[1]That contact between Vedism and the indigenous religion of the Indus valley modified both (a) by making the cult of yoga acceptable to Vedism, which formerly believed only in sacrifice and (b) by the retention of non-vedic elements in popular religion. As to the cult of yoga, its indigenous origin is seen in certain stone statues discovered at Moheniodaro showing ascetics with eyes half shut in contemplation and fixed on the tip of the nose. These according to Chanda supply the missing links between the prehistoric Indus valley civilization and latter civilization of 'India'—Buddhist, Jain or Brahmanical —Memoir No 41 of arch survey quoted in Hindu India.

மற்றைய திராவிடக் கடவுளர் பலராமர், முருகன், காளி எனப்படுவர் [1].

பத்தாயிரம் ஆண்டுகளின் முன், தமிழ், இலக்கிய மொழியாயிருந்ததெனத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. ஆரியர் இந்தியாவை அடைந்த போது தமிழ் திருத்தமடைந்த மொழியாகவிருந்தது. விஞ்ஞானம், தத்துவம் சம்பந்தமான பல சொற்களை தமிழ் சமக்கிருதத்திடம் இரவல் பெற்றதென்று சிலர் கருதுகின்றனர். இது தவறு. அச்சொற்கள் மற்றைய ஆரிய மொழிகளில் எவ்வடிவிலும் காணப்படவில்லை. எனவே இச்செய்தி வழி நாம் அறியக்கூடியது இச்சொற்களையும் அறிவிற்குரிய பல செய்திகளையும் ஆரிய மக்கள் இந்தியாவுக்கு வந்தபின் கற்றார்கள் என்பதே. அக்காலத்தில் அதிக பண்பாடடைந்திருந்த திராவிட சாதியாரிடமிருந்து அச்சொற்களையும் கருத்துக்களையும் அவர்கள் கற்றார்கள் எனக் கூறுவது

1. It is not generally admitted that a great deal of the ancient and medieval myth and legend enshrined in the Sanskrit epics and puranas is of Non-Aryan origin, and that even in vedic mythalogy certain pre-Aryan elements are present. Puranic myths of the gods and legends of kings, heroes, and sages, in the form in which we find them in the Sanskrit works, represent undoubtedly a considerable amount of modification from other original forms, whether Aryan or non Aryan. The non-aryan speaking masses of Northern India became Aryanised in language, and their tales and legends were retold as a matter of course in the Aryan language of their adoption

—Bulletin of the school of oriental studies Vol VIII (1935-1937)-S. K: Chatterjee

பொருத்தமாகத் தோன்றவில்லையா?[1] தமிழரிடத்தில் பழைய பாடங்கள் அடங்கிய நூல்கள் இருந்த போதும் சமய சம்பந்தமான பழைய நூல்கள் காணப்படவில்லை. இவ்வகைப் பாடல்கள் பாடப்பட்ட காலத்தில் அவர்களிடத்தில் சமயத் தொடர்பான இலக்கியங்கள் இருக்கவில்லை எனக் கூறுதல் பொருத்தமாகாது. அவ்விலக்கியங்களெல்லாம் இறந்தன. முதலாம் இரண்டாம் சங்கங்கள் இருந்த இடங்கள் கடலுள் மறைந்து போனதில் சந்தேகம் இருப்பினும் அந்நூல்கள் அழிந்து போயின என்பதில் சந்தேகம் எழுதற்கிடமில்லை. சமீபகாலங்களில் தோன்றிய பல நூல்கள் மறைந்து போனமையே அச்சந்தேகத்தைத் தெளிவிப்பதாகும். சீசர் காலத்தில் வாழ்ந்த தயதோரஸ் (Diadoras) எழுதிய நாற்பது நூல்களில் பதினொரு நூல்கள் மாத்திரம் கிடைத்துள்ளன. லிவி (Livy) எழுதிய

---

1. The Dravidian substratum in Sanskrit has been discovered by several scholars, and Kittel in his Kannada Dictionary has given some 450 Sanskrit words with possible Dravidian connections. A few other words in both Sanskrit and Prakrit and the vernaculars have subsequently been suggested as being of Dravidian origin by other scholars. Sylvain Levi and his pupils, Jean Przyluski of Paris, and Prabodh Chandra Bagchi of Calcutta and to some extent the present writer suggested a mumber of words in the Indo aryan as being Austie (Kol or Munda) origin and affinity--Non-Aryan Elements in Indo aryan S. K. Chatterji

—Journal of the Greater India Society Vol 3.

The Dravidian names of things and operations connected with all these arts of peace are native and not foreign (not borrowed from Sanskrit) The question has not yet been investigated, but on enquiry it will most probably turn out that many Sanskrit words connected with these arts were borrowed from Dravidian.

—Age of the Mantras P. 15, P-TS Iyengar.

நூல்களுட் பல மறைந்து போயின. [1]தசிதஸ், [2]தயேனிசஸ், [3]காசியஸ், [4]பொலிபியஸ் முதலியோரின் நூல்கள், பெரிதும் அழிந்துபோயின. கிறித்துவ ஆண்டுக்குச் சிறிது முன் எழுதப்பட்ட நூல்களாகிய பெரோசசின் பாபிலோனிய வரலாறு, கிளேசியசால் எழுதப்பட்ட பாரசீக வரலாறு, மெகஸ்தினனின் இந்திய வரலாறு, மெனிதோபிசின் எகிப்திய வரலாறு முதலியவைகளில் பிற ஆசிரியரால் மேற் கோளாகக் காட்டப்பட்ட சில பகுதிகளையன்றி மற்றவை மறைந்துபோயின.

ஆரியர் இந்தியாவை அடைந்தபோது, திராவிடர் சிறந்த நாகரிகமுடையவர்களா யிருந்தார்களென்று இருக்கு வேதம் கூறுகின்றது[5]. திராவிடர் அரண் செய்யப்பட்ட நகரங்களில் வாழ்ந்தார்

---

1. Tacilus 2. Dionysius 3. Dion Cassius 4. Polybius 5. as regards the material aspects of non-aryan civilization, the Rigveda refers to towns and forts broad and wide, full of kine, of 100 Pillars, built of stone, to autumnal forts as refuge against inundatons and to 100 Cities in a non-Aryan kingdom. Even the Vedic God Indra is designated for the occasion as *Purandara*—sucker of cities—Hindu India P-30-R. K. M.

"Brahmanical legends refer to the strong and wealthy cities on or near the banks of the Indus of which the Aryans took possession after a hard struggle for their adversaries were well armed, possessed horse and chariots, and built castles of stones Several of the places afterwards celebrated in Indian History, such as Taksha-sela, Mathura and Ujjin were said to have been founded by these non-Aryan people who were probably Dravidian race and perhaps conneted with the ancient Sumerians, the people of southern Babylonia whose history has been traced back to the fourth millennium B. C. These Dravidians called by the Aryans Asuras Eaityas, Dasus or Nagas were mostly

கள்; உலோகங்களில் செய்த அணிகலன்கள், நிறமையான ஆயுதங்கள், ஆடு மாடு முதலான திரண்ட செல்வம் உடையவர்களாகவும் மாய வித்தையறிந்தவர்களாயுமிருந்தனர். இந்து ஆரியர் அலைந்து திரியும் மக்களாயிருந்தனர். முந்திய நாகரிகத்தைப்பற்றிய வரலாறு அவர்களுக்கு இல்லை. "பழங்குடிகளிடமிருந்தே ஆரியர் கல்லினால் கட்டிடம் அமைக்க அறிந்தார்கள். அவர்கள் மற்றைய இந்து ஐரோப்பியரைப்போல மரத்தினால் அல்லது மரக் கம்புகளினால் கட்டிடமமைக்கவும் குகைகளில் வாழவும் அறிந்திருந்தனர்" எனப் பெரிய வரலாற்றாசிரியர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். பழைய திராவிடர் கடற்பயணம் செய்யும் சாதியினர். மலையாளக்கரைக்கும் பாபிலோனுக்குமிடையில் வாணிகம் நடந்ததென்பதற்கு அரிய சான்றுகள் உண்டு. சாலதியாவிலே கி. மு. 3000-ல் அமைத்த கட்டிடமொன்றில் மலையாளத் தேக்கமர உத்திரமொன்று காணப்பட்டது. இந்தியாவிலிருந்து பாபிலோனுக்கு வேட்டை நாய்கள் அனுப்பப்பட்டன; இரத்தினக் கற்கள் துணிக்கு

---

a maritime and trading people. In the Mahabharata they described as great magicians. They worshipped the sun and the serpent like the people of ancient media, with whom, perhaps they had trade connections. The amalgamation was either through military conquest or by peaceful penetration. Aryan and Non-aryan cultures gradually transformed the simple tribal organisation of Vedic society into powerful political status and finally made oceon instead of the river, the boundary of Aryavartha

—A Short History of India P 26—E. B. Havell.

ஊட்டும் சாயங்களும் அனுப்பப்பட்டன. பாபி லோனியர் ஆடையைக் குறிக்க வழங்கிய பெயர் சிந்து. சிந்து என்பது சிந்து ஆறு. சிந்து ஆற்றின் முகத்துவாரத்தில் நாகசாதியாரின் பெரிய இராச்சியம் இருந்தது.

## நாகர்

பாண்டி நாட்டில் வாழ்ந்த நாகர் அதிக மசிலின் துணிகளைப் பிறநாடுகளுக்கு அனுப்பினர். இது பிற்காலத்திலும் நடைபெற்றது. திராவிடர் மேற்கு ஆசியாவொடு வாணிகம் நடத்தியதன்பயனாகத் தமிழ்ச்சொற்கள் பல கிரேக்க எபிரேய மொழிகளில் சென்று வழங்கின. அவை, அரிசி, மிளகு, குரங்கு, மயில், தந்தம், சந்தனக்கட்டை, இஞ்சி, கறுவா முதலியவைகளைக் குறிக்கும் சொற்கள்.

இயக்கர் நாகர் இராக்கதர் அசுரர் எனக் குறிக்கப்பட்டோர் யார் என்பதைப்பற்றி இப்பொழுது ஆராய்வோம். இவர்கள் பழங்காலத்தில் இந்தியாவையும் இலங்கையையும் ஆண்ட கூட்டத்தினர். புராணங்கள் கூறும் பழைய வரலாற்றின்படி அசுரரின் முக்கிய இடம் இலங்கை. பின்பு இலங்கை இராக்கதரின் இருப்பிடமாயிருந்தது. இராக்கதரும் அசுரரும் வலிமை மிக்கவராயினும் நாகர் மிகத்திருந்திய மக்கள். சேர்ஹெர்பார் ரைஸ்லி[1] கூறுவதுவருமாறு: "தக்காணம் உலகில் மிகப் பழைய நில அமைப்புடையது. வரலாற்றுத் தொடக்கத்திலிருந்து அது திராவிடரின் உறைவிடமாகவுள்ளது. திராவிடரே இந்தியக் குலத்தினர்களுள் பழமையுடையோர்" [2]வேர்கூசன் என்பாரும் இக்கருத்தேயுடையர். திராவிடர் சுமேரியரை ஒத்த சாதியினர் என்பதற்கு ஆதாரமுண்டு. வடமேற்கு இந்தியத் திராவிடருக்கும்

---

1. Sir Herber Risely. 2. Ferguson.

பாபிலோனியருக்கும் தொடர்பிருந்ததென்பது ஆச்சரியப்படத் தக்கதன்று. இருசாதியினருக்கும் பொதுவான பல தொடர்புகள் இருந்தன; இரு சாதியினரும் ஒரு குலத்தைச் சேர்ந்தவர்களுமாவர். மொழி ஆராய்ச்சி இதனை வலியுறுத்துகின்றது.[3] திராவிட மொழிகளைப்போலவே சுமேரிய மொழியும் ஒட்டுச் சொற்களையுடையது[1]. மண்டை ஓடு சம்பந்தமான ஆராய்ச்சியும் இரு சாதியினரும் இனமுடையர் என்பதை

---

3. Dravidian place names are sometimes traced to Mesopotamia and Iran, while an ancient language spoken at Mittani reveals striking similarities to modern Dravidian of India—Hindu India P. 38.

1. I am however inclined to agree with late Sir Herbert Risely in his view that the Dravidian peoples are autochthons of the Deccan and the South of the Peninsula. Dr Haddon says:— The Dravidian may have been always in India as has already been said. H. R. Hall holds the view that the Sumerians came into Western Asia from South India where even their writing may have been invented which in its later developed form in Babylonia was the Cuniform Character in the inscriptions. Bruhi only marks a stage in the track of the Dravidans on their way from India to Sumer. The Sumerian civilisation is the earliest known in the world and if its Dravidian origin be accepted then a very ancient date for the Dravidian civilization must have to be admitted. The date of Sargon of Akkad, the founder of the dynasty of Akkad has been fixed at 2800 B. C. Now Akkad got her civilization from Sumer allowing for the development of Sumerian Civilization. The Dravidian settlement of Sumer may be probably placed at a date not less than 5000 B. C. —The bird and serpent myth Prof, Kalipada mitra M.A.
—The Q. J. O. T. mythic Society Vol XVI.

வெளியிடுகின்றது. சுமேரியச் சொற்கள் பல தமிழ்ச் சொற்களாகவும் தமிழில் வழங்கும் அதே பொருளுடையனவாயுமுள்ளன. இந்தியாவிலும் இலங்கையிலும் ஊர் என முடியும் இடப்பெயர்கள் பல உண்டு. பாபிலோனியாவிலே நிப்பூர் ஊர் என்னும் இடப்பெயர்கள் இருந்தன. மனு என்பது சுமேரியத்தில் ஊரைக்குறிக்கும். தமிழிலும் அதற்கு அதே பொருள் உண்டு. மன்னன் என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் பொன்னையுடையவன் என்பது பொருள் அசீரிய மன்னர் தமக்குப் பால் என்னும் பட்டப்பெயர் இட்டு வழங்கினர். பால் என்பதற்கு அரசன் அல்லது பாதுகாப்பவன் (பாலிப்பவன்) என்று பொருள். பாபிலோனியரின் இடியோடு கூடிய இருண்ட முகிற்கடவுளுக்கு இராமன் என்று பெயர். இது தமிழில் கறுப்பு மனிதன் எனப் பொருள்படும்.

அசீரியா அசுரின் நாடு. பழைய புராணங்கள் இலங்கை அசுரரின் முக்கிய இருப்பிடம் எனக் கூறுகின்றன. காலா என்பது அசீரிய பட்டினங்களிலொன்று. இலங்கையிலும் காலா என்னும் பட்டினமொன்று இருந்தது. இங்கிருந்து ஆசிய நாட்டுப் பண்டங்கள் பல மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. புராண காலத்தில் இலங்கை இலம் அல்லது ஈழம் எனப்பட்டது. சுமேரிய நாகரிகமுடைய எல்லம் என்னும் நாட்டைப் பாபிலோனியாவின் எல்லையிற் காண்கின்றோம். பாபிலோனியாவில் பயன்படுத்தப்பட்டனபோன்ற ஈமத்தாழிகள் தென்னிந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## இந்தியாவின் வரலாற்றுக்கு முற்பட்ட பழமை

சென்னையில் நடத்திய புதை பொருள் ஆராய்ச்சியில் கிடைத்த பழம் பொருள்களைப் பார்த்தபின் வின்சன் சிமித் என்னும் வரலாற்றாசிரியர் கூறியிருப்பது வருமாறு: "இப்பழம் பொருள்கள் பாபிலோனிலே பாக்டாட்டுக்கு அண்மையில் கிடைத்த பொருள்களை ஒத்திருக்கின்றன. இவ்வுண்மை பழைய இந்திய பாபிலோனிய நாகரிகங்களைத் தொடர்பு படுத்துவதற்குக் காட்டப்படும் பல சான்றுகளில் ஒன்றாகும். இது மேற்கு ஆசிய இந்திய மக்களின் குல ஒற்றுமையை வற்புறுத்திக்கூறுவதற்குந்தூண்டுதலாகவுள்ளது." இறந்தவர்களைத் தாழிகளில் இட்டுப் புதைக்கும் வழக்கம் இரு நாடுகளிலும் இருந்துவந்தது. திருநெல்வேலிப் பகுதியிலுள்ள பழைய இடுகாடு ஒன்று ரே (Rea) என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. அது 114 ஏக்கர் நிலப்பரப்புக் கொண்டது. ஒரு ஏக்கரில் 1000 தாழிகள் வரையில் புதைக்கப் பட்டிருக்கலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இறந்தவர்களை இவ்வகையாகப் புதைக்கும் வழக்கம் மற்றைய மக்களிடையே அறியப்பட்டிருக்கவில்லை. இருநாட்டு மக்களின் சமயமும் ஒரேவகையாக விருந்தது. இந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்த திராவிடர் பாபிலோனியாவினின்று வந்தார்களா? எல்லாவகையான காரணங்களும் எதிரான முடிவையே தெரிவிக்கின்றன. சுமேரியர் எல்லத்தைத் தமது குலத்தவரின் தொட்டில் எனக் கருதினர்கள். சமக்கிருத புராணங்களின்படி

பழைய இந்தியர் இளா (எல்ல) விருதத்தைத் தமது தாயகமாகக் கொண்டனர். விருதம் என்பதற்கு நாடு என்பது பொருள். எல்லம் எங்குள்ளது? எல்லம் பாபிலோனியாவின் அயலேயுள்ள நாடா? எல்லத்தைப்பற்றி விங்கர் (Wenker) எழுதிய வரலாற்றில், "செமித்தியர் (எல்லம் சுமேரியா என் னும்) முழு நாட்டுக்கும் எல்லம் எனப் பெயரிட்டு வழங்கினார்கள் என்றும் அன்ஷான் அல்லது சாம் என்பதே அதன் பெரும் பகுதிக்கு வழங்கிய உள் நாட்டுப்பெயர்" என்றும் காணப்படுகின்றது. செமித்திய காலத்திற்கு முற்பட்ட சுமேரிய காலத் தில் எல்லம் என்னும் பெயர் வழக்கில் இருக்க வில்லை. ஆகவே சுமேரியர் பாபிலோனிய எல்லத் தைத் தமது தாயகமாகக் குறிப்பிட்டிருக்க மாட் டார்கள். அந்நாடு சிறியதாயும் பாபிலோனுக்கு அண்மையிலுள்ளதாயும் இருந்தது. அது பாபி லோனிலிருந்து மலைத் தொடராலாவது கடலா லாவது பிரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குச் சிறிது தொலைவில் வாழ்ந்த சுமேரியர் அதனைப் புறம்பான நாடாகக் கொண்டு அதனைத் தமது தாயகமெனக் கூறினார்கள் என்பது பொருத்த மாகத் தோன்றவில்லை.

இந்திய பாபிலோனிய எபிரேய பழங்கதை கள் பழைய வெள்ளப்பெருக்கு ஒன்றைப்பற்றிக் கூறுகின்றன. விவிலியமறையிற் கூறப்படும் நோவா, பாபிலோனிய ஹாசி சதரா, இந்திய மனு அல்லது சத்தியவிரதன் என்போரும், அவருடன் கூட இருந்த சிலரும் அவ்வெள்ளப் பெருக்கி

விருந்து பிழைத்தனர். யான் படைத்த உயிருள்ள வைகளை எல்லாம் யானே அழிப்பேன் என்று ஜெகோவா நோவாவுக்குச் சொன்னர். இவ்வெள் ளப்பெருக்கு பழைய பெரிய பரந்த இடத்தை அழிவு படுத்தியதெனக் கூறமுடியாது. இம் மறைவு நிலம் கடலுள் மறைந்தது போல்வதால் உண்டாயிருக்கலாம். மனிதன் தோன்றிய பின் மேற்கு ஆசியாவின் எப்பகுதியாவது கடலுள் மறைந்து போனமைக்குச் சான்று இல்லை. இலங்கை இந்தியப் பழங்கதைகள் மறைந்துபோன நிலத்தைப்பற்றிக் கூறுகின்றன. மனிதனின் ஞாபகத்துக்கு எட்டாத ஒரு காலத்தில் இலங்கை யும் இந்தியாவும் ஒன்று சேர்ந்திருந்தன. வலேஸ் (Wallace) கூறியிருப்பது வருமாறு: "ஐந்தாவது காலக்கூற்றில் (Tertiary period—மனிதன் இப் பூமியில் தோன்றுமுன்) இலங்கையும் தென்னிந்தி யாவும் வடக்கே பெரிய கடலை எல்லையாகப் பெற்றி ருந்தன. இவை (இலங்கையும் தென்னிந்தியாவும்) தெற்கேயிருந்த பெரிய பூகண்டத்தின் பகுதியாக விருக்கலாம." இலங்கை இந்தியாவினின்றும் பிரிந் திருந்த காலத்தும் தென்னிந்தியா பெரிய தீவாக விருந்தது. இராமாயணத்திலும் மகாவம்சத்திலும் காணப்படும் பழங்கதைகளின்படி இலங்கையின் 11/12 பகுதிகள் கடலுள் மறைந்துபோயின. இத ஞல் சத்தியவிரதன் என்னும் திராவிடமனு கட லுள் மறைந்துபோன நிலப்பரப்பின் ஒரு பகுதியி னின்றும் மலையத்தை அடைந்தான் என்பது ஏற்றதாகத் தெரிகின்றது. இப்பழங்கதை இந்தி யர் இளாவிருதத்தினின்றும் வந்தார்கள் என்னும்

பழங்கதையை விளக்குகின்றது சுமேரியர் எல்லத்தினின்றும் சென்றூர்கள் என்பதையும் இது விளக்குகின்றது. இது பாபிலோனிய இந்திய வெள்ளப் பெருக்கைப்பற்றி விளக்குவதுமாகும்.

பாபிலோனியர் தமது நாகரிகம் கடலுக்கு அப்பால் இருந்து வந்ததெனை நம்பினூர்கள். ஈ ஆ. சுமேரியரை நாகரிகப்படுத்திய தெய்வம். இக்கடவுளைப்பற்றி டாக்டர் சேஸ் (Dr. Sayce) எழுதியிருப்பது வருமாறு:

"ஈ ஆ என்னும் கடவுள் நாளும் தனது இடமாகிய கடலினின்றும் எழுந்து மனிதனுக்கு விஞ்ஞானக் கலையையும், கைத்தொழிலையும், நாகரிகப் பழக்கங்களையும் உதவினூர். அவரே முதல் முதல் எழுதும் முறையை அறிவித்தார். ஈஆவின் பண்பு மிக்க இடமாகிய எருது நகர் ஒருபோது கடற்கரைப் பட்டினமாகவிருந்தது. அது மற்றைய நாடுகளோடு வாணிப உறவு பூண்டிருந்தது. அந் நாடுகள் அதன் நாகரிகத்தை வளம்பெறச் செய்தன." சுமேரிய பழங்கதைகளின்படி ஈஆ பாரசிகக் குடாக்கடலில் வாழ்ந்து அழகிய மரக்கலத்தில் உலகைச் சுற்றி அடிக்கடி பயணஞ் செய்தார். இப்பழங் கதையினூல் சுமேரியரின் நாகரிகம் கடலுக்கு அப்புறத்திலிருந்து வந்ததெனக் கொள்ளக் கிடக்கின்றது. அவர்களின் ஆதியிடம் இலங்கையும் மலையாளமுமாக விருக்கலாம் அராபியரின் பழங் கதைகளின்படி மனிதனின் ஆதி உறைவிடம் இலங்கையாகும். ஏதேன் தோட்டத்தினின்றும் வெளியேற்றப்பட்டபின் ஆதித் தாய் தந்தையர்

இலங்கைக்குச் சென்றார்கள். இப்பழங் கதையி னல் மேற்கு ஆசியமக்கள் மேற்கு ஆசியாவைத் தமது ஆதி இருப்பிடமாகக் கொள்ளவில்லை எனத் தெரிகின்றது.

இப்போதைய விஞ்ஞானிகளின் முடிவு எவ்வா றிருக்கின்றது? பேராசிரியர் ஹெக்கல் மறைந்து போன கண்ட பூகண்டமே மனிதரின் தொட்டில் எனக் கருதினர்.

டாக்டர் மக்லீன் (Dr. Macleane) கூறுவது, "மக்களின் குலசம்பந்தமான ஆராய்ச்சியினல் வடக்கிலுள்ள மத்தியதரைச் சாதியினர் தென் னிந்தியாவினின்றும் சென்று உலகின் பல பாகங் களில் பரவினர்கள் என்று கூறுவதை மறுப்பதற் குக் காரணமில்லை"[1] என்பதாகும்.

---

1. From the recent discovery of the sumeran and Hittite relics in the Indus valley and elsewhere in India it is becoming more and more clear that India never stood isolated from the rest of Asia in the past· but that her Culture and civilization formed not only an integral part of the ancient chaleolithic culture of Asia and Europe but also one of the oldest and the richest treasure house from which all other civilizations derived their largest contributions to which they gave the best of their products in exchange. From the Indus valley one section of people afterwards came to be designated as the Dravidians, marched towards the west both by sea as well as by land, settled down in the province of Sumer in Lower Babylonia under the name of Sumerians and spread Sumero—Dravidian Civilization as far as the Holy land of Palestine and Jerusalem and thence to Europe and Africa.

—Quarterly journal of the mythic society
Vol XIX No 3.

திராவிடக் குலத்தினர் வடக்கினின்றும் வரவில்லை. தெற்கினின்றுமே வந்தார்கள், தெற்கே இருந்தநாடு தென்திவாகலாம்; இலங்கை அதன் பகுதியாக விருந்ததெனலாம். மூன்று உலகத்தாருக்கும் பயம் விளைத்த திராவிட மக்களின் உறைவிடம் இலங்கை எனப் புராணங்களும் இதிகாசங்களும் கூறுகின்றன. திராவிடர் இந்தியா முழுமையிலும் பரவிப் பலுச்சிஸ்தானம் வரையில் சென்றார்கள். அங்கு திராவிடமொழியின் சிதைவாகிய திராவிடம் இன்றும் வழங்குகின்றது. இன்று வட இந்தியாவில் வாழும் சிறு சிறு கூட்டத்தினர் இன்றும் திராவிட மொழிகளைப் பேசுகின்றனர். தரை வழியாகவும் கடல் வழியாகவும் திராவிடர் பாபிலோனியா, அசிரியா, எல்லம் முதலிய மேற்கு ஆசிய நாடுகளுக்குச் சென்றார்கள்.

நிநூஸ் (Ninus) மக்களின் இராணியாகிய செமிரமிஸ் நிநேவாவை கி மு 3000-க்கு முன் அமைத்தாள் என்றும், உலகிலுள்ள மக்கள் எல்லாரிலும் பார்க்க இந்தியரே உயர்வுடையவர்களும் செல்வமுடையவர்களும் எனக்கேள்வியுற்ற அவள் அவர்களோடுபோர் தொடுத்து முறியடிக்கப்பட்டாளென்றும்பாபிலோனியபழங்கதை கூறுகின்றது. தமது நாகரிகம் ஒசிரிஸ் என்னும் கடவுளால் உண்டானதென எகிப்தியர் கூறுகிறார்கள். ஒசிரிஸ் கடவுள் இந்தியாவில் பல பட்டினங்களைக் கட்டிற்று என அவர்கள் பழங்கதைகள் கூறுகின்றன. அக் கடவுள் தான் வாழ்ந்த அடையாளங்களை அவ்

விடங்களில் விட்டமையால் பிற்கால மக்கள் அக் கடவுளின் பிறப்பிடம் இந்தியா என நம்பினார் கள்.

பாபிலோனிய வரலாற்றின்படி நீரோவாரகா அமைக்கப்பட்ட காலத்தில் உலகிற் பெரிய சாதி யினர் இந்தியாவில் வாழ்ந்தார்கள். இந்திய தெய்வ மாகிய ஒசிரிஸ் எகிப்திய நாகரிகத்தை உண்டு பண்ணிற்று என இந்தியர் கூறினார்கள் என பழைய எகிப்திய வரலாறுகளிலிருந்து அறிகின் ரோம்.

திராவிடர் வரலாற்று ஆராய்ச்சியினால் இந்தி யர் எகிப்தியர் பாபிலோனியர் நாகரிகங்கள் ஒத்த பழமையுடையன எனத் தெரியவருகின்றது.

தமிழர் தென்திசைத் தீவினின்று இந்திய நாட்டை அடைந்தவர்களாயின் இலங்கையின் நாகரிகம் இன்னும் பழமையுடையதாகும். தென் கண்டத்தினின்றும் சென்ற திராவிடர் வெள்ளப் பெருக்கின் முன்னிருந்த திராவிட அடிப்படையை மேலும் பலமடையச் செய்திருக்கலாம். இலங்கை யில் வாழும் மக்கள் சிலர் பழயமக்களின் வழித் தோன்றல்களாவர்.

## * தென்னிந்தியரின் கடல் ஆதிக்கம்

வரலாற்றுக் காலத்துக்கு முன்தொட்டுத் தென்னிந்தியா மேற்குத்தேசங்களோடு வாணிபத் தொடர்பு கொண்டிருந்தது. பஞ்சாப்பிலும்

* இது "The quarterly journal of the mythic society" Vol. XVI-ல் வெளிவந்த ஓர் ஆங்கிலக் கட்டுரையின் சுருக்கம்.

சிந்துவிலும் நடத்திய புதைபொருள் ஆராய்ச்சியில் பழம்பொருள்கள் பல கிடைத்துள்ளன. அவை சூசா, பாபிலோன் முதலிய விடங்களிற் கிடைத்த பழம்பொருள்களை ஒத்தன. அப்பழம் பொருள்களின் காலம் கி. மு 3000 வரையிலாகும். மட்பாண்டங்கள் கண்ணாடி வளைகள், எழுத்துகள் வெட்டப்பட்ட முத்திரைகள் என்பன அப் பழம் பொருள்கள். சில ஆண்டுகளின் முன் டாக்டர் ஆர்னெல் (Dr. Hornell) சூசா, இலகாஷ் என்னும் இடங்களிற் கிடைத்த கிண்ணங்கள், கைவளைகள் இந்தியப் பொருள்களே எனக் காட்டியுள்ளார். ஆதிசநல்லூர் சமாதிகளிற் கண்டுபிடிக்கப்பட்ட ஈமத்தாழிகளில் கிடைத்த மண்டை ஓடுகள் எகிப்தியரின் மண்டை ஓட்டை ஒத்தனவென்று பேராசிரியர் எலியட் சிமித் தெளிவுபடுத்திவுள்ளார். பேராசிரியர் சிமித், பெரி என்னும் இருவரும் கி. மு. 2,600 முதல் இந்தியாவுக்கும் எகிப்துக்குமிடையில் தொடர்பு இருந்ததென்பதை ஏற்றுக் கொண்டார்கள். பிளின்டேர்ஸ் பெற்றி (Flinders Petrie) என்பார் எகிப்தில் அரச பரம்பரை தோன்றுவதற்கு முற்பட்ட மக்கள் எல்லத்திலிருந்து சென்றவர்கள் ஆகலாம் என்று மண்டை ஓட்டின் அளவு, வடிவங்களை ஆதாரமாகக் கொண்டு கூறியுள்ளார். பாபிலோனில் வாழ்ந்த சுமேரியர் கடல்வழியாகவோ தரைவழியாகவோ இந்தியாவினின்றும் சென்ற திராவிடர் ஆகலாம் என டாக்டர் ஹால் கருதியுள்ளார். மினேவருக்கும் திராவிடருக்கும் உறவு இருந்ததென்பது கைதரபாத்தில் கிடைத்த வரலாற்றுக் காலத்திற்கு

முற்பட்ட மட்பாண்டங்களைக் கொண்டு நன்கு தெளியப்படுகின்றது. பிற்காலத்தில் மேற்குத் தேசங்களுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பிருந்த தென்பதை விளக்கும் பலசான்றுகள் உள்ளன. அண்மையில் எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பக்குவம் செய்யப்பட்டுள்ள பிணங்கள் (mummies) இந்திய அவுரி நீலத்தால் சாயமூட்டப்பட்ட துணிக ளால் சுற்றப்பட்டிருந்தன. பல்லாவரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஈமத்தாழிகளை ஒத்தவை பாக்டாட் டிலும், எற்றூஸ்கா (இத்தாலி)விலும் கண்டுபிடிக் கப்பட்டன. எற்றூங்கானிய ஈமத்தாழிகள் தென் னிந்திய தாழிகளை எல்லாவகையிலும் ஒத்துள் ளன. தென்னிந்தியாவில் தாழிகளில் வைத்துப் பிரேதங்களைப் புதைக்கும் வழக்கு இருந்ததென் பது இராமாயணம் புறநானூறு மணிமேகலை முத லிய நூல்களால் விளங்குகின்றது. போசானியஸ் (Pousanias) என்னும் கிரேக்கர் (கி. பி. 200) பதினொருமுழ நீளமுள்ள இந்திய தாழிகளைப்பற் றிக் கூறியிருக்கின்றார்.

எபிரேய மொழியில் காணப்படும் துகிம் அக லிம் என்பன தோகை அகில் என்னும் தமிழ்ச் சொற்களேஎன நீண்டநாட்களின்முன்கால்ட்வேல் காட்டியுள்ளார். கி. மு. 9-ம் நூற்றாண்டில் அசிரிய அரசனாகிய மூன்றாம் சாலமன்சர் நாட்டிய தூணில் இந்தியக் குரங்குகளும் யானைகளும் வெட்டப்பட்டுள் ளன. இந்தியாவினின்றும் வெளிநாடுகளுக்குப் போக்கப்பட்ட துணிகளுக்குப் பலவகைச் சாயங் கள் ஊட்டப்பட்டிருந்தனவென்பது அரிஸ்தோபு

லுஸ் (Aristobulus) என்பார் கூற்றுக்களால் விளங்குகின்றது. மகாவம்சம் என்னும் சிங்கள நூல் ஐந்து நிறங்கள் ஊட்டப்பட்ட உடைகளைப் பற்றியும், மஞ்சள்நிற ஆடைகளைப் பற்றியும், நாகர் அணியும் மல்லிகைப் பூப்போன்ற நிற முடைய உடையைப் பற்றியும் கூறுகின்றது.

வாணிகம் பெரும்பாலும் கடல் வழியாக நடந்தது. மிகப் பழங்காலம் முதல் தரைப்பாதை இருந்த தெனவும் கொள்ளப்படுகின்றது. அவ் வாருயின் இந்தியா பாபிலோன் எகிப்து என்னும் நாடுகளை இணைக்கும் மத்திய இடங்கள் இருந்தன வாகலாம். அரிசி என்னும் தமிழ்ச்சொல் அராபி மொழியில் அல்ராஸ் என்றும் கிரேக்கில் அரிசா என்றும் வழங்கும். அரிசிக்கு வடமொழிப் பெயர் விரீகி, பாரசிகப்பெயர் விரிசினசி. இதனுல் கிரேக் கரும் உரோமரும் அராபியர் மூலம் அரிசியைப் பெற்ருர்கள் எனத் தெரிகிறது. பாரசீகர் இந்துஸ் தானத்தில் நின்றும் அதனைப் பெற்றனர். கிரேக் கர் அரிசியை வட இந்தியாவினின்றும் பெற்ருல் அரிசியைக் குறிக்கும் பெயர் அரிசி என்றிராது. விரீகி என்றிருக்கும். அரிசி இந்தியா, பர்மா, சீன, என்னும் நாடுகளுக்குரியது. கி. மு. 2,800-ல் சீனவில் அரிசி அறியப்பட்டிருந்தது. தென்னிந் தியாவிலும் அரிசி அக்காலத்தில் அறியப்பட்டிருக் கலாம்.

தென்னிந்தியரிடத்தில் கரை·ஓரங்களால் செல் லும் சிறிய மரக்கலங்கள் இருந்தனவென்றும் அவை இலங்கைத் தீவுக்கு அப்பால் செல்லவில்லை

என்றும் டாக்டர் கால்ட்வேல் கூறியுள்ளார். எகிப்திலே கண்டுபிடிக்கப்பட்ட பழம்பொருள்கள் இக்கொள்கை தவறுடையதென்பதைக் காட்டிவிட்டன. எகிப்திய ஐந்தாம் அரச பரம்பரைக்கால ஓவியங்களிற் காணப்படும் மரக்கலங்கள் இந்திய மரக்கலங்கள்போலவே உள்ளன. மண்டை ஓடுகளின் ஒற்றுமை, ஞாயிறு பருந்து இடபவழிபாட்டுத் தொடர்புகள் இவ்விரு நாடுகளுக்கிடையில் தொடர்பிருந்ததென்பதை வெளியிடுகின்றன.

தென்னிந்தியா மேற்கு உலகோடும் கிழக்கு உலகோடும் தொடர்புவைத்திருந்ததாயினும் கடற்பயணங்கள் பிறருதவியின்றி இந்திய மக்களாலேயே நடத்தப்பட்டன. இந்திய மரக்கலங்களின் முன்புறத்தில் இருகண்கள் வைக்கப்பட்டிருத்தலைக் காணலாம். இன்று அவை அழகுக்காக வைக்கப்படுகின்றன. எகிப்தியர் முற்காலத்தில் அவைகளை ஒசிரிஸ் தெய்வத்தின் கண்களாகக் கருதி அமைத்தனர். மரக்கலங்களுக்குக் கண்வைக்கும் வழக்கம் எகிப்தியரிடமிருந்து தமிழர் பெற்றதெனத் தெரிகின்றது திராவிடரின் படகு செலுத்தும் தண்டு சத்தகம் எனப்பட்டது. இதுவட்ட வடிவுடையது. பாய், பாய்மரம் முதலின திராவிடப் பெயர்களே. நங்கூரம் என்பதும் திராவிடச்சொல்லே. ஓடம், ஒதி, தோணி, தெப்பம், கலம், கப்பல், முதலிய சொற்கள் வெவ்வேறுவகை மரக்கலங்களைக் குறிக்கின்றன. "தமிழகத்தில் கரையை அடுத்துச் செல்லும் மரக்க்லங்கள் உண்டு. மரங்களைச் சேர்த்துக் கட்டிச்செய்யப்பட்ட மரக்கலங்களுள்ளன. கங்கை

ஆற்றில் செல்லும் மரக்கலங்கள் கொளந்தைய எனப்படுகின்றன:" எனப்பிளினி கூறியுள்ளார். முற்காலத்தில் அறியப்பட்ட பலவகை மரக்கலங் களை இன்னும் மலையாளக் கரையில் காணலாம்.

ஆரிய மக்கள் கடல் வாணிகத்தால் இலாபஞ் சம்பாதிக்க ஆவலுடையவர்களா யிருந்தார்கள் என்று இருக்குவேதம் கூறுகின்றது. இருக்கு வேதத்தில் பிலவ, நோ முதலிய சொற்கள் மரக் கலத்தைக் குறிக்கின்றன. நாவாய் என்னும் சொல் இருக்குவேதத்தில் ஓரிடத்தில்மாத்திரம் வரு கின்றது மரத்தில் குடையப்பட்ட மரக்கலத்தைக் குறிக்கும் தாரு என்னும் சொல் இருக்கு வேதத் தின் கடைசி மண்டலத்தில் காணப்படுகின்றது. இருக்கு வேதத்தில் தண்டைக்குறிக்க அரித்திரா என்னும் சொல் வழங்கப்பட்டுள்ளது. பாய்மரம், சுக்கான் என்பவைகளைக் குறிக்கச் சரியான சொற்கள் காணப்படவில்லை. ஓடக்காரனைக் குறிக் கும் நாவாயா என்னும் சொல்லும், சுக்கானைக் குறிக்கும் நோமண்ட என்னும் சொல்லும் சதபதப் பிராமணத்தில் காணப்படுகின்றன. ஓடம் செல் லக்கூடிய ஆறுகளுக்கு நாவாய என்னும் பெயர் முதல் மண்டிலத்திற் காணப்படுகின்றது. ஓடக் காரர் சம்பந்தமாக அரித்திரா என்னும் பெயரை விட வேறுயாதும் எசுர்வேதத்தில காணப்பட வில்லை.

அதர்வ வேதத்தில் சம்பின் என்னும் பெயர் காணப்படுகினறது. இது இருக்கு வேதத்தில் பொருள் மயக்கமுடைய சம்பா என்னும் சொல்

லோடு தொடர்புடையதாகலாம். இச் சொற்களை ஆராய்வதால் ஆரியரின் கடற்பயணங்கள் திராவிட அடிப்படையைப் பெற்றிருந்தனவென்பது விளங்கும். அரித்திரா என்னுஞ் சொல் கப்பல் ஓட்டும் தண்டைக் குறிக்கும் அரிகோலா (Hari-gola) என்னும் திராவிடச் சொல்லை நினைவுக்குக் கொண்டுவருகின்றது. அரிகோலாஎன்பது அரிவா, கோல் என்னும் இரண்டு சொற்களாலானது. இது பரிசல என்னும் சொல்லின் வேறுபாடென்றும் அது பார்ஷாற் எனத் திரிந்து வேதகாலச் சொல்லாக வழங்கிற்றென்றும் கொள்ளலாம். சம்பா என்னுஞ் சொல் சம்பான் என்னும் மலாயச் சொல்லை நினைவூட்டுகின்றது. சம்போசின் தலைநகர் சிந்து ஆற்றின் மேற்குக் கரையில் இருந்ததெனவ அரியன் (Arrian) கூறியுள்ளார். சம்பி என அதர்வவேதத்திற் காணப்படுஞ் சொல் மரக்கலமோட்டிகளையே குறிக்கின்றது.

கௌடலியர் மரக்கலம் சம்பந்தமாகக் குறிப்பிடும் பெயர்களுள் வேணு, வேணுகா என்னும் சொற்கள் காணப்படுகின்றன. வேணு என்னும் சொல்லுக்கு நேரான சொல் வேதங்களிற் காணப்படவில்லை. அது ஓடம் என்னும் திராவிடச் சொல்லை ஒத்துள்ளது. அமரகோசம் என்னும் நிகண்டினுல் இச் சொற்கள் இரவல் வாங்கப்பட்டன என்று தெரிகின்றது. ஒரே பொருளில் வழங்கும் பிளவ, உடுப, கோல, ஓட, அரிகோல என்பனவை போன்றதே வேணு என்பதும். புத்த நூல்களில் சொல்லப்படும் மரக்கலங்கள் கட்டுவ

தற்கு இரும்பு பயன்படுத்தப்படவில்லை. நந்த குமாரனும் அவனது மனைவியும் தாமிரலிப்தியி லிருந்து இலங்கைக்குப் பயணஞ் செய்த மரக்கலம் பலகைகளைக் கயிற்றினுல் பிணைத்துச் செய்யப்பட் டது. பலகைகள் மூங்கில் முளைகள் அறைந்து பொருத்தப்பட்டன.

ஓடம், தோணி, தெப்பம் முதலிய பெயர்கள் மரக்கலங்களின் வளர்ச்சியைக் காட்டுவன. காட் டுப் பிரம்புகளைப் பின்னிச்செய்த ஓடங்கள் பிளினிகாலம்வரையில் வழங்கின. இதன்பின் தோணி (மரத்தைத் தோண்டிச் செய்யப்படுவது) செய்யப்பட்டது. இதன்பின் மரங்களைக் கயிற்றி ஞற் பிணைத்துக் கட்டப்படும் தெப்பங்கள் செய்யப் பட்டன. பின்பு மரப் பலகைகளைப் பொருத்திச் செய்யப்படும் பிளாவு செய்யப்பட்டது. இது இன்றும் மலையாளத்திற் காணப்படுவதும் மரக் கலம் கட்டப் பயன்படுவதுமாகிய அயினிபிளாவு என்னும் ஒருவகைப் பலாவோடு சம்பந்தப்பட்ட தாகலாம். இதற்கு அடுத்தபடியிலுள்ளது கலம். அடித்தட்டுக்கு மேலே மேற்கட்டி அல்லது மறைப்பு உடையது கப்பல் எனப்படும். தெலுங்கில் கப்ப என்பதுக்கு மறைப்பு என்று பொருள். தோணியைக் குறிக்கும் தாரு என்னும் சொல் ஒரு முறையும், கட்டுமரத்தைக் குறிக்கும் தியுமந, இரண்டு பக்கங்களிலும் சவள் வலிக்கும் பக்கங் களையுடைய சமயானி, நோயான, அரித்ரா முத லிய பெயர்கள பலவிடங்களிலும் வேதங்களில் வந்துள்ளன. சமக்கிருதத்திலுள்ள கர்ப்பாரா

என்பது கர்பசாமாத்தியா என்னும் சொல்லின் வேறுபாடு. தியுமங என்னும் சொல் மரக்கலத்தி லுள்ள மேடையைக் குறிக்கின்றது.

பழைய தமிழ்நூல்களில் கடற்பயணங்களைப் பற்றிய செய்திகள் அறியக்கிடக்கின்றன. மிகப் பழங்காலத்தில் கடற்பயணஞ் செய்வதிற் பேர் போனவர்கள் கொல் (Kols) என்னும் மக்கள். கோலாப்பூர், கொல்லம் முதலிய பெயர்களே அவர்களின் ஞாபகமாகக் காணப்படுகின்றன.

கொல் மக்களிடமிருந்து கரைநாடுகளை நாக சாதியினர் கைப்பற்றியிருந்தனர். சமக்கிருத நூல் களிற் காணப்படும் கற்பனையோடு சம்பந்தப்பட்ட வரலாறுகளால் நாகர் தீவுகளில் வாழ்ந்தவர்கள் என்பதும், அவர்கள் கடல் ஆதிக்கம் பெற்றிருந் தார்கள் என்பதும் விளங்கும். அருச்சுனன் உலூ பியை மணந்தான் என்பதால் நாகர் என்போர் சரித்திரத் தொடர்புடையவர்களே என விளங்கு கின்றது. இராமரின் புதல்வனுகிய குசலன் குமுட் வதி என்னும் நாகப்பெண்ணை மணந்தான். நாக தீவு பாரத வருடத்திலுள்ள ஏழுதீவுகளுள் ஒன்று எனப்புராணங்கள் கூறுகின்றன. சரித்திரக் காலத்திற்கு முன்னரேயே நாகர் இந்துமாக் கடற் றீவுகளிற் குடியேறியிருந்தார்களென்பது நாகபட் டினம், நாகர் கோயில் முதலிய இடப்பெயர்களால் அறியவருகின்றது. வராகமிகிரர் கொல்லகிரி சோழ நாட்டுக்கு அயலிலுள்ளதெனக் கூறியுள் ளார். கிள்ளி என்னும் சோழன் இலங்கை நாக

குலப் பெண்ணை மணந்தான். வீரகூர்ச்சா என்னும் பல்லவஅரசன் நாககன்னிகையை மணந்தான். சோழ பாண்டிய நாடுகளின் வாணிகம் திரையர் வசம் இருந்தது. பாண்டிய நாட்டு மக்கள் வரலாற்றுக் காலத்திற்குமுன் தொட்டே கடலோடிகளாக விருந்தனர். அவர்களின் தலைநகரம் இராமாயணத்தில் குறிக்கப்பட்டுள்ளது இலங்கையை ஆண்டமுதல் அரசன் பாண்டிய இராசகுமாரியை மணந்தான். குமரி, கொற்கை, காயல், பாம்பன் முதலியவை பாண்டியரின் துறைமுகப் பட்டினங்களாக விருந்தன. தொண்டையர்,கடாரம் (பர்மா) முதல்சிங்களம் வரையில் வாணிகம் நடத்தினார்கள். உருத்திரங்கண்ணனார் என்னும் புலவர் இளந்திரையனைப் பாடியுள்ளார். வேங்கடத்தைத் தலைநகராக உடையதிரையனைப் பற்றி அகநானூறு (85,340) கூறுகின்றது. இறையனாரகப் பொருளுரை இளந்திரையம் என்னும் நூலையும் திரையன் மாறன் என்னும் அரசனையும் குறிப்பிடுகின்றது.

சரித்திர காலத்திற்குமுன் கன்னட நாட்டுக் கடம்பர் பெரிய கடலோடிகளாயிருந்தனர். புறநானூறு (335), தமிழ் வழங்கிய திராவிடருள் அவர்கள் மிகப்பழமை உடையவர் எனக்கூறுகின்றது. பதிற்றுப்பத்து பெருவாய் என்னும் துறை முகத்தைப்பற்றிக் கூறுகின்றது. கடம்பர் கிரேக்கரோடு வாணிகம் நடத்தியதைப் பற்றி டாக்டர் ஹல்ச் (Dr Hulzsch) என்பாரும் சீனரோடு வாணிகம் நடத்தியதைப்பற்றி நரசிம்மாச்சாரியாரும் காட்டியுள்ளார்கள்.

கி. பி. 2-ம் நூற்றூண்டில் எழுதப்பட்ட பைபிரஸ் ஏட்டில் கன்னட வாசகங்கள் இருப்பதை ஹல்ச் கண்டார். தாலமி சோதர்கால நாணயமொன்று பங்களூர் சந்தையில் கிடைத்தது. சந்திரவதி என்னும் இடத்தில் நடத்தப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சியில் அகஸ்தஸ் காலத்து நாணயங்கள் மாத்திரமல்லாமல் கி.மு. 2-ம் நூற்றூண்டில் வாழ்ந்த வாதூ (Wa-to) என்னும் சினச் சக்கரவர்த்தியின் நாணயங்களும் காணப்பட்டன.

குட்டுவன் நன்னனைப் போரில் கொன்று வெற்றிபெற்றது மாத்திரமல்லாமல் கடம்பரையும் அழித்தான். வெல்லப்பட்ட கடம்பரிற் பலர் துடியன், பாணன், பறையன் முதலியவர்களைப்போல் பயிர்த்தொழில் புரிவோராயினர். இவர்களிற் பலர் கிழக்குக்கரைக்குச்சென்று கலிங்கம்,பிகார் ஒரிசா நாடுகளில் தமது அதிகாரத்தை நாட்டியவர்களாகவும் காணப்படுகின்றனர். கஞ்சப் பிரிவிலுள்ள முகலிங்கத்துக்குங் சலந்திபுரம் எனபது இன்னொரு பெயர். அங்கு மதுகேசுவரருக்கு ஆலயமுண்டு. மதுகேசுவரர் கடம்பரின் கடவுள். கலிங்கத்தின் கிழக்குக் கலிங்கரின் தலைநகராகிய கலிங்கநகரமும், சலந்திபுரமும் ஒன்று என்று கொள்ளப்படுகின்றன. கஞ்சம் விசாகபட்டினம் முதலிய பகுதிகளில் கடம்புகுடா என்பது இடங்களுக்குப் பெயராக வழங்குகின்றது. கடம்ப அரச வழியினர் மகதத்தை ஆண்டார்கள் எனக் கன்னட கையெழுத்து நூல் ஒன்று கூறுகின்றது.

---

ஸ்ரீ பிரின்டர்ஸ், 147, பவழக்காரத் தெரு, சென்னை

# புத்தகங்கள்!

| | ரூ. | அ. |
|---|---|---|
| தமிழன் தொடுத்த போர் | 1 | 12 |
| சித்திரபுத்திரன் | 0 | 6 |
| புதியதோர் உலகு | 0 | 6 |
| ஈரோட்டுப் பாதை | 0 | 6 |
| திராவிடஸ்தான் வேண்டாமா | 0 | 8 |
| விதிக்கு அடிமைத்தனம் | | 2 |
| கி. பி. 2000 | 1 | 12 |
| உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு | 0 | 8 |
| காரல் மார்க்ஸ் | 1 | 0 |
| சிறந்த பேச்சாளர் | 1 | 0 |
| விராயி | 1 | 4 |
| கொடு கல்தா | 0 | 8 |
| அம்பேத்கார் [வரலாறு] | 1 | 0 |
| இந்தி பொது மொழியா | 0 | 8 |
| சிரிக்கும் வையம் | 0 | 4 |
| நரகாசுரப் படுகொலை | 0 | 12 |
| வானொலியிலே | 1 | 0 |
| வாழ்க்கையில் வெற்றி | 2 | 8 |
| போர்வாள் நாடகம் | 1 | 4 |
| காமாந்தகாரக் கடவுள் | 0 | 8 |
| இந்துமத ஆபாசதரிசனி | 2 | 8 |
| தாழ்வு மனப்பான்மை | 0 | 12 |
| நாஸ்திகர் யார் | 0 | 6 |
| கவிஞர் விழா | 0 | 6 |
| இந்திய சோஷலிசம் | 0 | 12 |
| இந்துமதம் தமிழர்மதமா | | 8 |
| தொழிலாளர் விழிப்பு | 0 | 5 |
| புதுமைக் குறள் | 1 | 0 |
| பரமசிவனுக்கு பகிரங்க கடிதம் | 0 | 3 |
| பாட்டாளி | 0 | 8 |
| பதில் கூறுங்கள் | 0 | 8 |
| முதல் விசாரணை | 1 | 4 |
| ஆரியப் புல்லுருவி | 0 | 6 |
| கோகில ராணி | 1 | 0 |
| கம்பரும் வம்பரும் | 0 | 4 |
| திராவிடஸ்தான் | 0 | 10 |
| இராமாயணம் நடந்த கதையா | 0 | 3 |
| பெண்கள் புரட்சி | 0 | 14 |
| பெண்கள் போராட்டம் | 0 | 6 |
| சங்கிலிச்சாமி | 0 | 8 |
| பிள்ளையோ பிள்ளை | 0 | 6 |
| பெரிய இடத்துப் பெண் | 0 | 8 |
| வாழ்க திராவிடம் | 0 | 4 |
| காதல் கடிதங்கள் | 0 | 3 |
| நல்ல பெண்கள் எப்படி இருப்பார்கள் | 0 | 3 |
| முத்த மிடுவது தவறு | 0 | 3 |
| காதலை வளர்ப்பது எப்படி | | 3 |
| பெண்களும் வசியமும் | 0 | 4 |
| பெண்களிடம் ஆண்கள் விரும்புவது என்ன | 0 | 3 |
| திராவிட இந்தியா | 1 | 0 |
| பெரியார் இராமசாமி | 1 | 12 |
| பழந்தமிழர் | 2 | 0 |
| பெரியார் பெருந்தொண்டு | | 8 |
| மறுமலர்ச்சிக்கவிதைகள் | | 8 |
| தமிழர் தன்மதிப்புப் பாடல் | | 6 |
| பெரியார் பொன் மொழி | | 3 |
| அறிஞர் அண்ணாதுரை | 0 | 5 |
| கடவுளால் ஆகாதது | 0 | 8 |
| பேசும் பிணம் | 0 | 8 |
| India's Language Problem | 2 | 8 |
| அஞ்சா நெஞ்சன் அழகிரி | | 8 |
| பொது சேவையா | 0 | 2 |
| நால் அகங்கள் | 0. | 8 |

## பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு : : சென்னை 1

FREE PRINTERS, MADRAS